வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 27.05.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 172 | பக்கங்கள் : 16

# பொருளாதாரத்தை சீரழித்த அனைவர்மீதும் நடவடிக்கை!

## தெரிவுக் குழுவை நியமித்து விசாரணை நடத்த பரிந்துரை



கொழும்பு, மே. 27

**தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமான அதிகாரிகள் உள்ளிட்ட சகலருக்கும் எதிராக விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்வதற்கு பாராளுமன்ற தெரிவுக் குழுவை (கோப்) நியமிக்குமாறு பொது நிறுவனங்களுக்கான பாராளுமன்றக் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் பரிந்துரைத்துள்ளார்.**

15

## பதவி விலகுகிறார் இராணுவ தளபதி!



கொழும்பு, மே 27

இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா எதிர்வரும் 31ஆம் திகதியுடன் பதவியிலிருந்து விலகுகிறார் என்று இராணுவத்தின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

15

## படை தளபதியாக விகும் லியனகே



கொழும்பு, மே 27

இராணுவத்தின் புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் விகும் லியனகே நியமிக்கப்படவுள்ளார். இவர் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி பொறுப்பை ஏற்பார்.

ஜெனரல் சவேந்திர சில்வா பாதுகாப்பு படைகளின் பிரதானி

15

## பொருளாதார நெருக்கடி தொடர்பில் ஜூன் 7 சபையில் விசேட அறிக்கை!

கொழும்பு, மே. 27

பொருளாதார நெருக்கடி தொடர்பில் பாராளுமன்றில் விசேட அறிக்கையொன்றை வெளியிடவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜூன் மாதம் 7 ஆம் திகதி இடம்பெறவுள்ள பாராளுமன்ற அமர்வின் போது குறித்த அறிக்கையை வெளியிடவுள்ளதாக பிரதமர் மேலும் கூறினார். (அ)

## சிறுநீரக, புற்று நோயாளிகளுக்கான மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு

### அரச மருந்தாளர் சங்கம்

கொழும்பு, மே 27

சிறுநீரக, புற்று நோயாளிகளுக்கு தேவையான பல மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. தற்போது இவ்வாறான நோயாளிகள் பாரிய ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர் - என்று அரச மருந்தாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் தலைவர் அஜித் திலகரத்ன கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

ஒரு மருந்து கட்டும் துண்டு அல்லது பிளாஸ்ரரைக்கூட மருத்துவமனைகளில் காண முடியாத நிலை எதிர்காலத்தில் உருவாகும். சிறுநீரக

15

## அரச ஊழியருக்கு சம்பள அதிகரிப்பு

கொழும்பு, மே 27

இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வைக் கொண்டுவர பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவு அதிகரித்து வருவதைக் கருத்தில்கொண்டு இந்தச் சம்பள உயர்வு அறிமுகப்படுத்தப்படும் என்று பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

15

## கச்சதீவை மீட்பதற்கு இது தகுந்த தருணம்!

### மோடியிடம் ஸ்டாலின் வலியுறுத்து

சென்னை, மே 27

இலங்கையிடம் இருந்து கச்சதீவை மீட்க வேண்டும் என்று நேற்று இந்தியப் பிரதமர் மோடியிடம் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை தொடக்கி வைப்பதற்காக இந்திய பிரதமர் நரேந்திர மோடி

15

## இலங்கையில் ஜனநாயகம் நிலைக்க இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும்!

### தமிழகத்தில் பிரதமர் மோடி உறுதி



சென்னை, மே 27

இந்தியா தொடர்ந்தும் இலங்கை மக்களுடன் நின்று ஜனநாயக நிலைத்தன்மை, பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிக்கும் என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி தமிழகத்தில் தெரிவித்தார்.

15

## நட்பு நாடுகளின் முழு ஆதரவு இலங்கைக்கு அவசரம் தேவை

### உச்சி மாநாட்டில் ஜனாதிபதி கோரிக்கை



கொழும்பு, மே. 27

ஜப்பானிடம் இருந்து நிதி பெறுவது தொடர்பாக தற்போது நடைபெற்று வரும் பேச்சுகள் விரைவில் முடிவுக்கு வரும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டார்.

இந்த இக்கட்டான நேரத்தில் இலங்கைக்கு சாத்தியமான உதவிகளை ஆராயுமாறு ஜனாதிபதி மாநாட்டில் கலந்துகொண்ட அனைத்து நட்பு நாடுகளுக்கும் மேலும் அழைப்பு விடுத்தார்.

இலங்கையின் முக்கிய அபிவிருத்திப் பங்காளிகளில் ஒன்றாக ஜப்பான் திகழ்வதாக தெரிவித்த ஜனாதிபதி, இலங்கை அரசாங்கம் பொருளாதாரத்தையும் நாட்டையும் ஸ்திரப்படுத்த முயற்சிக்கும் வேளையில் ஜப்பான்

15

## பெற்றோல் நிரப்பலை கண்காணிக்க செயலி!

கொழும்பு, மே 27

நாடளாவிய ரீதியில் எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் நிரப்பும் வாகனங்களை கண்காணிக்க உருவாக்கப்பட்ட புதிய செயலி நேற்று பல இடங்களில் சோதனை செய்யப்பட்டதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

இந்த செயலி பொலிஸ் திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்பத் துறையால் உருவாக்கப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

15

## ஐ. எம். எவ்வின் குழு அடுத்த வாரம் வரும்!

கொழும்பு, மே 27

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்) பிரதிநிதிகள் குழு ஒன்று அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளது.

பிரதமரின் அழைப்பை ஏற்று வரும் இந்தக் குழு, இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டுப்பதற்கான வழிமுறைகள் குறித்து ஆய்வு செய்வதுடன் அதுபற்றி கலந்துரையாடுவார்கள் என்று தெரிய வருகின்றது. (ஐ)

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

இரட்டை பிரஜாவுரிமை உள்ளவர்கள் பாராளுமன்ற உறுப்பினராவதைத் தடுக்கும் வகையிலான பத்தொன்பதாவது திருத்த யோசனை இருபத்தியோராவது திருத்தத்தில் இடம்பெறுமானால், அதனை ஆதரித்து வாக்களிக்க பொதுஜன முன்னணி பின்நிற்கலாம் என்ற ஊகத்தை இந்தப் பத்தியில் தெரிவித்திருந்தேன்.

நாம் ஊகித்ததுபோலவே, பொதுஜன முன்னணி அந்த விவகாரம் தொடர்பான தனது முடிவை தெட்டத் தெளிவாக அறிவித்துவிட்டது.

இரண்டாயிரத்து ஐந்து ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, மீண்டும் ராஜபக்ஷ குடும்பத்திலிருந்து அடுத்து ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதைத் தடுப்பதற்காகவே இந்த இரட்டை பிரஜாவுரிமை உள்ளவர்களை தடுக்கும் சரத்து பத்தொன்பதாவது திருத்தத்தில் சேர்க்கப்பட்டது என்பது இரகசியமானதல்ல.

ஆனால், அதனையும் மீறி, தனது அமெரிக்க குடியுரிமையை மீள திருப்பிக் கொடுத்துவிட்டு, தேர்தலில் போட்டியிட்ட கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக ஆகிவிட்ட பின்னரும், தமக்காகவே கொண்டுவரப்பட்ட அந்த சரத்து இருக்கவே கூடாது என்று, அதனை இல்லாமல் ஆக்குவதில் முனைப்புக் காட்டிய ராஜபக்ஷக்கள், இருபதாவது திருத்தத்தைக் கொண்டுவந்து, பின்னர் இரட்டை குடியுரிமை உள்ள பசில் ராஜபக்ஷவை பாராளுமன்றிற்கும் அழைத்து வந்தனர்.

இதன்மூலம் பசில் ராஜபக்ஷ இந்த நாட்டுக்கு சொன்ன செய்தி என்ன என்பது தெரிந்ததுதான். அதாவது, அவருக்கு இந்த நாட்டிற்கு பாராளுமன்றத்தினூடாக பணியாற்றுவதைவிட, அமெரிக்க பிரஜாவுரிமைதான் முக்கியமானது என்பதையே அவர் நிரூபித்துக்காட்டினார். அதேவேளை, எங்களை பாரளுமன்றம் வரவிடாமல் தடுப்பதற்காக நீங்கள் கொண்டுவந்த அந்த சட்டத்தையே இல்லாமல் செய்துவிடவும் எங்களால் முடியும் என்பதையும் அவர் தனது அரசியல் எதிரிகளுக்கு சொல்ல மறக்கவில்லை.

இப்போது, ஜனாதிபதியிடம் குவிந்து கிடக்கும் அதிகாரங்களைக் குறைக்கவேண்டும் என்பதுதான் நாட்டின் ஒட்டுமொத்த கோரிக்கை. அதனைச் செய்ய ஜனாதிபதியும் இணக்கம் தெரிவித்திருக்கின்றார் என்று அறியமுடிகின்றது. இந்த நேரத்தில் இரட்டைக் குடியுரிமை விவகாரம், இருபத்தோராவது திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேறுவதற்கு தடையாக இருக்குமானால், அதனைத் தவிர்த்தேனும் அதனை நிறைவேற்ற வேண்டும் என்பதில் ஜனாதிபதி அக்கறை காட்டுவதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்று நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டுவர, வெளிநாடுகளின் உதவியையும், நன்கொடைகளையும் பெற்றாலும், நாடு இந்த நெருக்கடியிலிருந்து மீளப்போவதில்லை என்பதையே பொருளாதார நிபுணர்கள் கோடிட்டுக் காட்டிவருகின்றனர்.

கடன்களை அடைக்கவோ, அல்லது அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காகவோ தொடர்ந்து கடன்களையே பெற்றுக்கொண்டிருந்தால், நாடு இந்த நெருக்கடியிலிருந்து மீண்டுவரமுடியாது என்பதையே சகலரும் திரும்பத்திரும்ப கூறிக்கொண்டிருக்கின்றனர்.

புலம்பெயர் இலங்கையர்களின் ஒத்துழைப்பை தொடர்ந்து நாடிவரும் இலங்கை, வெறுமனே அவர்களிடமிருந்து பொருளாதார உதவிகளையும் முதலீடுகளையும் மாத்திரமே எதிர்பார்ப்பது எந்த வகையிலும் நியாயமானது அல்ல. அவர்கள் இந்த நாட்டின் பிரச்னைகளுக்கு உதவ வேண்டுமே தவிர, அவர்கள் பாராளுமன்றத்தில் உறுப்பினராக வந்து, நாட்டுக்கு தமது தொழில் அனுபவங்களையும் தாம் அந்த அந்த நாடுகளில் பெற்ற அரசியல் அறிவுகளையும் இந்த நாட்டுக்கு வழங்க முடியாது என்று கட்டுப்பாடு விதிப்பதும் சரியாகாது. நாட்டின் அதி உயர் பதவிகளான ஜனாதிபதி பதவிக்கோ அல்லது பிரதமர் பதவிக்கோ வேண்டும் என்றால் இதுபோன்ற நிபந்தனைகளை விதிக்கலாம். அதைவிடுத்து, பாராளுமன்றத்தில் சாதாரண உறுப்பினராகவோ ஏன், பிரதேச சபை ஒன்றின் உறுப்பினராகவோகூட நீங்கள் இருக்கமுடியாது என்பது, நியாயமானது அல்ல.

நீங்கள் உதவிகளோடு நின்று கொள்ளுங்கள் என்று அவர்களுக்கு வரம்பு கட்டக்கூடாது.

அதைவிட இன்றுள்ள முக்கிய பிரச்னை, நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரம்தான். ஒரு தனி மனிதரிடம் குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை பாராளுமன்றத்திற்கு பதில் சொல்லவேண்டிய ஒருவரிடம் ஒப்படைக்கவேண்டும். அதனையே நாட்டு மக்கள் இன்று எதிர்பார்த்திருக்கின்றனர். அதனை செய்வதற்கு இந்த இரட்டைப் பிரஜாவுரிமை விடயம் தடையாக இருக்குமானால், அதனை விடுத்தேனும் இருபத்தியோராவது திருத்தத்தை கொண்டுவரவேண்டும்.

- ஊர்க்குருவி

# வங்கிகளின் தலைவர்களுடன் பிரதமர் ரணில் சந்திப்பு!

கொழும்பு, மே 27

வங்கிகளின் தலைவர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போது ஏற்றுமதி சார்ந்த பொருளாதார கொள்கையின் அடிப்படையில் முடிவுகளை எடுக்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் ரணில் விக்கிமசிங்க சுட்டிக் காட்டியுள்ளார்.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியை ஏற்றுமதி நடவடிக்கைளை ஊக்குவிப்பதன் மூலமே சமாளிக்க முடியும். எதிர்காலத்தில் இலங்கை மட்டுமன்றி வெளிநாடுகளும் பல சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் என குறிப்பிட்ட பிரதமர் அதனை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும்.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியை ஏற்றுமதி நடவடிக்கைளை ஊக்குவிப்பதன் மூலமே சமாளிக்க முடியும். எதிர்காலத்தில் இலங்கை மட்டுமன்றி வெளிநாடுகளும் பல சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் என குறிப்பிட்ட பிரதமர் அதனை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (ஐ)

# சுகாதார ஸ்தாபன பிரதிநிதியுடன் வெளிவிவகார அமைச்சர் சந்திப்பு



கொழும்பு, மே 27

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் இலங்கைக்கான உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதிநிதி கலாநிதி அலகா சிங்கை நேற்றுமுன்தினம் தனது அமைச்சில் சந்தித்து, இலங்கை எதிர்கொள்ளும் தற்போதைய சவால்கள், குறிப்பாக மருந்துப் பொருட்கள் தொடர்பாக கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலின் போது, நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பல சவால்களை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் சுட்டிக் காட்டியதுடன், இந்த கடினமான தருணத்தில் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதற்காக உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதிநிதியின் அலுவலகம் முன்னெடுத்துள்ள செயலூக்கமான நடவடிக்கைகளுக்காக அவருக்கு நன்றி தெரிவித்தார். தற்போதைய சுகாதாரம் தொடர்பான சவால்களை எதிர்கொள்வதற்காக இலங்கைக்கான உலக சுகாதார ஸ்தாபனத்தின் முழுமையான ஆதரவை கலாநிதி. சிங் அமைச்சரிடம் உறுதிப்படுத்தினார்.

பல்வேறு அரச நிறுவனங்களிடமிருந்து வெளிப்படும் உதவிக்கான கோரிக்கைகளை ஒழுங்குபடுத்தும் மற்றும் நாட்டின் அவசரத் தேவைகளை அடையாளம் காண அனுமதிக்கும் மத்திய பொறிமுறையை நிறுவுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

இது, இலங்கை தொடர்பில் கவனம் செலுத்தும் இலக்கு உதவிகளை வழங்குவதில் பல தரப்பு நன்கொடை நிறுவனங்கள், அபிவிருத்திப் பங்காளிகள் மற்றும் வெளிநாடுகளுக்கு உதவும். மருத்துவ சவால்களை எதிர்கொள்வதற்கும், அரச மற்றும் உலக சுகாதார நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் அதிகபட்ச பலன் மக்களை சென்றடைவதை உறுதி செய்வதற்கு எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் குறித்த நிபுணத்துவத்தையும் அவர் வரவேற்றார்.

2022 ஜூலை இறுதி வரையானது முக்கியமான காலப் பகுதியாகும் என்றும், ஆகஸ்ட் 2022 முதல் ஜூலை 2023 வரை நாட்டில் போதுமான மருந்துவப் பொருட்கள் இருக்கும் என்றும் கலாநிதி. சிங் தெரிவித்தார். தற்போது பல நாடுகளில் இருந்து பல உதவிகள் பெறப்படுகின்றன. இந்த சூழலில், அவர்கள் இலங்கையில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்துடன் இணைந்து நன்கொடைகள், குறிப்பாக தனியார் நன்கொடைகளுக்கான தளத்தை அமைப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

உலக சுகாதார ஸ்தாபனத்திடமிருந்து, குறிப்பாக இலங்கையிலுள்ள நாட்டிற்கான அலுவலகம் மற்றும் தற்போதைய சுகாதாரம் சம்பந்தப்பட்ட சவால்களின் நிலையைக் கையாள்வதில் அரசாங்கத்திற்கு உதவுவதற்கு பல வெளிநாடுகளின் ஆதரவைப் பெற்றுள்ள வலுவான, நிலையான மற்றும் தொடர்ச்சியான ஆதரவிற்காக இலங்கை அரசாங்கத்தின் உண்மையான பாராட்டுக்களை அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார். (ஐ)

# ஊடகவியலாளர் நடேசன் 18ஆவது நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், மே 27

2004 ஆம் ஆண்டு இனந் தெரியாதவர்களால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 18ஆம் ஆண்டு நினைவேந்தலும் நூல் வெளியீடும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வு யாழ். ஊடக அமையத்தின் தலைவரும் யாழ். தினக்குரல் நாளிதழின் ஆசிரியருமான ஆ. சபேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நடேசனின் ஊடகத்துறை பயணம்: நினைவுரைகள் நூல் அறிமுகமும் வெளியீடும் நடைபெறும். தொடர்ந்து, "அரசியல் மற்றும் இதர நெருக்கடிகளை அரசியலமைப்பு தீர்வுகள் மூலமாக முகாமை செய்தல் - இலங்கையில் அதற்கான சாத்தியங்களும் சவால்களும்" என்ற தலைப்பில் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கோசலை மதன் ஆற்றவுள்ளார். (ஐ)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 27

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டில் அவர், குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக நடத்தப்படும் வாராந்த சொற்பொழிவும் - மாதந்த நாயன்மார் குருபூஜை நிகழ்வு கனடாவின் ரொறன் ரோவில் வசிக்கும் சிவஸ்ரீபால. திருஞானந்தக் குருக்களின் அனுசரணையில் நடக்கிறது.

இந்த நிகழ்வின் வரிசையில், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பகவிநாயகர் அறநெறிப் பாடசாலையில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

இதில், "நாவலர் பெருமானின் கல்விப்பணி" எனும் தொனிப்பொருளில் இளம் சைவப்புலவர் ச.நவநீதன் சொற்பொழிவாற்றுவார். அதன் நிறைவில் வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கு பாராட்டு பரிசில்கள் வழங்கப்படும். (ஐ)

ஈழநாடு
Eelanadu
27.05.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 13

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

# மற்றவர்களை குற்றம்சாட்டுவதற்கு முன்னால்?

கோட்டாபயவைக் காப்பாற்றும் முயற்சியில் ரணில் ஈடுபட்டுவருகிறாரென அகில இலக்கை தமிழ் காங்கிரஸின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருகின்றார். இதே வகையான ஆனால், வேறு கோணத்தில், கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனும், ரணிலின் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கின்றார். ஆனால், சுமந்திரனின் அடிப்படையான குற்றச்சாட்டு, ஓர் ஆசனத்தை மட்டுமே வைத்திருக்கும் ரணில் பிரதமராக நியமிக்கப்பட்டிருப்பது தொடர்பானது. ஆனால், இன்றைய சூழலில் ரணிலின் பொருத்தப்பாட்டை சுமந்திரன் நிராகரிக்கவில்லை.

கோட்டாபயவை பாதுகாப்பது தொடர்பில் கஜேந்திரகுமார் மற்றவர்கள்மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றபோது, அவரின் கட்சியின் தேர்தல் பகிஷ்கரிப்பு தொடர்பிலும் இவ்வாறானதொரு குற்றச்சாட்டு அப்போது முன்வைக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தொடர்ச்சியாக ராஜபக்ஷக்களை எதிர்த்தே வந்திருக்கின்றது. அதில் கூட்டமைப்பிடம் ஒரு தெளிவான கொள்கை நிலைப்பாடிருந்தது. கூட்டமைப்பின் நிலைப்பாட்டிலேயே, தமிழர் தாயகத்தின் பெரும்பான்மையான தமிழ் மக்களும் இருந்தனர். அந்த அடிப்படையிலேயே அவர்களின் வாக்களிப்பும் இடம்பெற்றது.

2010இலிருந்து, அனைத்து தேர்தல்களிலுமே, தமிழ் மக்கள் ராஜபக்ஷ குடும்ப எதிர்ப்பின் அடிப்படையிலேயே, வாக்களித்திருக்கின்றனர். கடந்த ஜனாதிபதி தேர்தலில், சஜித் பிரேமதாஸ வெற்றிபெற்ற இடங்கள் வடக்கு - கிழக்கு மட்டும்தான். கோட்டாபய எதிர்ப்பின் அடிப்படையிலேயே, தமிழ் மக்கள் சஜித்தை தெரிவு செய்திருந்தனர். அந்த வகையில் கொழும்பில் 'கோட்டா கோ ஹோம்' - உச்சரிக்கப்படுவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னதாகவே கோட்டாபய பொருத்தமற்றவர் என்னும் நிலைப்பாட்டை தமிழர்கள் வெளிப்படுத்தியிருந்தனர். இலங்கையின் அடிப்படையான ஜனநாயகக் கட்டமைப்புக்களை பாதுகாப்பதற்கு, கோட்டாபயவின் தோல்வி முக்கியமானது என்பதை, கூட்டமைப்பும், தமிழ் மக்களுக்கும் தெளிவாகவே முன்வைத்திருந்தனர்.

கூட்டமைப்பும், தமிழ் மக்களும் இவ்வாறானதொரு நிலைப்பாட்டை கொண்டிருக்கும்போது - அது பற்றி சிறிதும் அலட்டிக் கொள்ளாது, கஜேந்திரகுமார் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தேர்தல் பகிஷ்கரிப்புக்கு அழைப்பு விடுத்தது. தமிழ் மக்கள் தேர்தலை பகிஷ்கரித்ததன் காரணத்தால்தான், 2005இல் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற முடிந்தது. இது அனைவரும் அறிந்த சங்கதி. சமாதான பேச்சை ஒரு பொறியென்று கருதிய, விடுதலைப் புலிகள், அந்தப் பொறியிலிருந்து விடுபடும் நோக்கிலேயே அத்தகையதொரு முடிவை எடுத்திருந்தனர். ஆனால், அந்த முடிவால், விடுதலைப் புலிகள் மேற்குலகத்தின் எதிர்ப்பை சம்பாதித்துக் கொண்டனர்.

2009இற்கு பின்னர், ஜனாதிபதி தேர்தல்களைப் பகிஷ்கரிக்கக் கூறியவர்கள் எந்தப் பொறியிலிருந்து விடுபடும் நோக்கில் அதனைக் கோரினர்? ஜனாதிபதி தேர்தல்களில் தமிழ் மக்கள் ஒருவருக்கும் வாக்களிக்காதுவிட்டால், ஈழத் தமிழ் மக்களின் வாக்குகளால் வெற்றிவாய்ப்பை அடையக் கூடிய ஒருவருக்கு தோல்வியேற்படும். தேர்தல் பகிஷ்கரிப்பால் கிடைக்கப் போகும் ஒரேயொரு நன்மை இதுதான். அடுத்தவர்கள்மீது, குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும்போது, ஒவ்வொருவரும், தங்களை நிறுத்துப் பார்த்துக் கொள்வது அவசியம்.

ரணில் தொடர்பில் எவ்வாறான அபிப்பிராயங்கள் இருப்பினும்கூட, ரணில், மேற்குலகின் ஆதரவைப் பெற்றிருக்கும் ஒருவர். அமெரிக்க தூதுவரே, அவரின் பதவியேற்பை முதலில் வரவேற்றிருந்தவர். மேற்குலகின், குறிப்பாக, அமெரிக்காவின், அழுத்தங்களையே, தமிழர்கள் எதிர்பார்த்திருக்கின்றனர். அவர்களின் ஆதரவில்லாமல், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில்கூட, இலங்கைமீதான அழுத்தங்களை தொடர முடியாது. எனவே, இப்போது ரணிலை எதிர்ப்பதால், ஈழத் தமிழ் மக்களுக்கு எந்தவொரு நன்மையும் கிட்டப்போவதில்லை. மேலும், எல்லாவற்றையும் வாக்குவங்கி அரசியல் கண்ணோட்டத்தில் நோக்கக்கூடாது. அது தமிழ் மக்களின் உரிமைசார் அரசியலுக்கு நல்லதல்ல. ரணிலை விட்டுவிட்டு, சூழ்நிலையை கையாளுவது தொடர்பில் மட்டுமே, தமிழர் தலைமைகள் தங்களின் கவனத்தை செலுத்த வேண்டும்.

# பொலிஸ் மா அதிபரின் காட்டமான கடிதம்!

**அலசுவது இராஜதந்திரி**



அரச தரப்பினரின் போலி முகத்திரைகளைக் கிழித்தெறியும் விதத்தில் பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரட் ணவுக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தை எழுதி அனுப்பி வைத்துள்ளவர் நாட்டின் பொலிஸ் மா அதிபர் சி. டி. விக்கிரமரத்ன என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த மே 9ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து குற்றப்புலனாய்வுப் பொலிஸார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட பலர் இதுவரை குற்றப்புலனாய்வுத் துறை பொலிஸாரால் விசாரிக்கப்பட்டுள்ளனர். பாராளுமன்ற உறப்பினர்களான சனத் நிஷாந்த, மிலான் ஜயதிலக்க மற்றும் ஆறு பேர் பூர்வாங்க விசாரணைகளின் பின்னர் எதிர்வரும் ஜ/ன் முதலாம் திகதி வரை கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றின் உத்தரவின்பேரில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மே 9ஆம் திகதி வன்முறைகளுக்குக் காராணமாக இருந்தவர்களில் ஒருவர் எனக் கருதப்படும் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும் குற்றப் புலனாய்வுப் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். இவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோது பொலிஸ் தலைமையகத்துக்கு வெளியே பொதுமக்கள் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிராக கோஷம் எழுப்பியிருந்தனர்.

இத்தகைய பின்னணியிலேயே பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரட்ணவுக்கு பொலிஸ் மா அதிபர் காட்டமான கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

மே 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைகளை பொலிஸார் கட்டுப்படுத்த தவறியிருந்தனர் எனக்குறிப்பிட்டு பொலிஸ் மா அதிபரிடம் விளக்கம் கோரும் கடிதம் ஒன்றை பாதுகாப்புச் செயலாளர் அனுப்பி வைத்திருந்தார்.

இந்தக் கடிதத்துக்கு வழங்கியுள்ள விளக்கத்திலேயே பொலிஸ் மா அதிபர் சி. டி. விக்கிரமரத்ன கடந்த சில வருடங்களாக பொலிஸ் உத்தியோகத்தர் பதவிக்கு தெரிவு செய்ப்பட்டவர்கள் தொடர்பாக தமது அபிப்பிராயத்தை வெளியிட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் சி. டி. விக்கிரமரத்னவின் கடிதத்தை நோக்கும்போது சட்டம் ஒழுங்கை கையாள்வது தொடர்பாக பொலிஸார் அசமந்தப் போக்குடன் இருந்து வருவதற்கான காரணத்தை அறிந்து கொள்ள முடிந்தது.

பொலிஸ் மா அதிபரின் கடிதத்தில் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக அரசியல் செல்வாக்கின் அடிப்படையிலேயே பொலிஸ் சேவைக்குப் பலர் சேர்த்துக்கொள்ளப்பட்டனரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு புதிதாக பொலிஸ் சேவையில் சேர்ந்தவர்களில் பலர் பதாள உலக கும்பல்கள், போதைவஸ்து வியபாரிகள் ஆகியோரோடு தொடர்புபட்டவர்களாக இருக்கின்றனர் என்று பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபரின் பாதுகாப்புச் செயலாளருக்கான கடிதம் எட்டுப் பக்கங்களைக் கொண்டதாகும். அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது : கடந்த ஒரு வருடத்தில் பொலிஸ் சேவைக்கு 184 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர். இதில், 126 பேர் நேர்முகப்பரீட்சை எதுவும் இன்றி பொலிஸ் சேவையில் சேர்க்கப்பட்டிருந்தனர். அரசியல்வாதிகளின் சிபாரிசின் அடிப்படையிலேயே இவர்கள் பொலிஸ் சேவையில் இணைக்கப்பட்டிருந்தனர்.


இவர்களில் அநேகர் நாட்டின் பல முன்னணி பொலிஸ் நிலையங்களில் சேவைக்கு அமர்த்தப்பட்டனர். கடந்த பதினொரு மாத காலத்தில் அரசியல் செல்வாக்குடன் பொலிஸ் சேவையில் இணைந்தவர்களில் 21 பேர் போதைவஸ்துக்களுடன் கைது செய்யப்பட்டிருந்தனர். அத்துடன் 156 பேர் போதை வஸ்து உட்கொள்ளும் பேர்வழிகள். 130 பேர் போதை வஸ்து வியாபாரிகளுடன் தொடர்புடையவர்கள் என்று பொலிஸ் மா அதிபர் சி. டி. விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் கடந்த மே 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பாக தம்மிடம் பாதுகாப்புச் செயலாளரால் விளக்கம் கேட்கப்பட்டமைக்கு மேலும் பதிலளிக்கையில், பல அரச தரப்பு அரசியல்வாதிகள் தமது தொகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமக்கு விருப்பமான பொலிஸ் அதிகாரிகளையே பொறுப்பதிகாரிகளாக நியமித்துள்ளனர். இந்நிலையில் அரச தரப்பு அரசியல்வாதிகளின் இல்லங்கள் தாக்கப்பட்டதை அவர்களால் நியமிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகளே தடுக்கத் தவறியிருந்தனர் என்று பொலிஸ் மா அதிபர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்மூலம் நாட்டின் சட்டம் ஒழுங்கைப் பேண வேண்டிய பொலிஸ் துறை இன்று எவ்வளவு தூரம் ஒரு கீழ்மைப்பட்டுள்ளது என்பதற்கு பொலிஸ் மா அதிபரின் பாதுகாப்புச் செயலாளருக்கான கடிதமே சான்று பகிருகின்றது.

இதேவேளை, சட்ட மா அதிபர் சஞ்சய் இராஜரட்ணம் தற்போது பாரபட்சமற்ற முறையில் கடந்த மே-9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைகள் சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அறிவுறுத்தி யுள்ள நிலையில் அரச தரப்பின் முன்னணி அரசியல்வாதிகள் சட்டத்தின் பிடியில் சிக்கிக்கொண்டாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை என்றே கருதமுடியும்.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு






**மேடம்**
முயற்சியில் தடைகளை சந்திப்பீர்கள். அலைச்சல் அதிகரிக்கும் நாள். குடும்பத்தினரால் செலவு அதிகரிக்கும். எதிர்பாலினர் நட்பில் எச்சரிக்கைத் தேவை. ஓய்வின்றி செயல்படுவீர்கள்.

**இடபம்**
முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். பணவரவு திருப்தி தரும். எதிரிகள் வில கிச் செல்வர். திறமை வெளிப்படும் நாள். எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழிலில் கூடுதல் வருமானம் கிடைக்கும்.

**மிதுனம்**
எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். அரசு வழியில் நன்மை கூடும். வழக்கு சாதகமாகும். முயற்சி வெற்றியாகும். தொழிலில் போட்டியாளர்கள் விலகுவார்கள். புதியவர்கள் வழியே லாபம் உண்டு.

**கடகம்**
செயலில் இழுபறி இருக்கும். உறவுகளால் உதவி கிடைக்கும். தொழிலில் திருப்பம் உருவாகும். புதிய முயற்சி மேற்கொள்வீர்கள். திறமை வெளிப்படும் நாள். அரசு வழியில் உதவி உண்டு.

**சிம்மம்**
எதிரிகளால் சங்கடங்களை சந்திப்பீர்கள். எதிர்பார்த் தவற்றில் இழுபறியான நிலை நீடிக்கும். மனதில் பயம் வந்துபோகும். பிரச்னைகள் குறுக்கிடலாம். மற்றவர்களை நம்பி பொறுப்பை ஒப்படைக்க வேண்டாம்.

**கன்னி**
விலகிச் சென்றவர்கள் தேடி வருவர். செல்வாக்கு உயரும். அரசு வகையில் நன்மை உண்டு. உங்களுடைய முயற்சி வெற்றி பெறும். ஆதாயம் காண்பீர்கள். மனதிற்கினிய சம்பவம் நடந்தேறும்.

**துலாம்**
முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். தொழிலில் எதிரி தொல்லைகள் விலகும். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். நீண்ட நாள் விருப்பம் நிறைவறும். எதிர்ப்புகள் விலகும். உறவினர்கள் உதவியாக இருப்பர்.

**விருட்சிகம்**
பணவிஷயத்தில் இழுபறியை சந்திப்பீர்கள். உறவினர்களால் சங்கடத்திற்கு ஆளாகலாம். வழக்கு விவகாரத்தில் இழுபறி நீடிக்கும். பிள்ளைகளால் நன்மை அடைவீர்கள். பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும்.

**தனுசு**
தேவையற்ற பயம் வந்து போகும். பொறுமை அவசியம். சந்தோஷத்திற்காக பணம் செலவழிப்பீர்கள். விருப்பம் நிறைவேறும். பேச்சில் கவனம் தேவை. அவசரப்பட்டு முடிவு எடுக்க வேண்டாம்.

**மகரம்**
இழுபறியாக இருந்த செயல் நிறைவேறும். தேவைகள் நிறைவேறும் நாள். செயலில் இருந்த தடைகள் விலகும். அரசு வழியில் நன் மையை எதிர்பார்க்கலாம். முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

**கும்பம்**
பேச்சில் கவனம் தேவை. யாருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். புதிய முதலீட்டை தவிர்க்கவும். கவனக்குறைவால் இழப்புக்கு ஆளாகலாம். நிதானம் அவசியம். செயல்களில் தடைகளைச் சந்திப்பீர்கள்.

**மீனம்**
வெளியூர் பயணம் செல்வீர்கள். அலுவலகத்தில் நெருக்கடிக்கு ஆளாக நேரிடும். பொறுப்புகளால் பணிச்சுமை அதிகரிக்கும். தொழிலில் நெருக்கடிக்கு ஆளாகலாம். விழிப்புடன் செயல்படுவது அவசியம். நண்பர்கள் உதவி செய்வர்.

# கருணாநிதி சிலையை திறப்பதற்காக தமிழகம் வந்தார் வெங்கையா நாயுடு

சென்னை, மே 27

இந்திய குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு 5 நாள் பயணமாக தமிழகம் வந்துள்ளார். இவர் நாளை முன்னாள் முதல்வர் கருணாநிதி சிலையை திறந்து வைக்கவுள்ளார்.

தமிழகத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக வெங்கையா நாயுடு நேற்று சென்னை வந்தார்.

குடியரசு துணைத் தலைவர் நாளை சனிக்கிழமை சென்னை ஓமந்துாரார் அரசினர் தோட்ட வளாகத்தில் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதியின் சிலையை திறந்து வைத்து உரையாற்றுவார்.



சென்னை ஓமந்துாரார் தோட்ட வளாகத்தில் பெரியார் மற்றும் அண்ணா சிலைகளுக்கு இடையே கருணாநிதி சிலை அமைக் கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அ.தி.முகவில் உள்ள அனைவரும் எனது தலைமையில் செயல்படுவர்!

## நம்பிக்கை வெளியிடுகிறார் சசிகலா

சென்னை, மே 27

அ. தி. மு. கவில் உள்ள அனைவரும் ஒன்றிணைந்து எனது தலைமையில் செயல்படுவார்கள் என்று வி. கே. சசிகலா உறுதிபடத் தெரிவித்தார்.

சென்னையில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஓர் அரசு மக்களுக்கு நல்லது செய்தாலும் சரி, மக்களுக்கு எதிராக செயல்பட்டாலும் சரி அதைவெளியில் கொண்டு வருவது பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும்தான். அது போன்ற நேரத்தில் அரசு தன் தவறுகளை திருத்திக் கொள்ள வேண்டுமே தவிர, செய்தியாளர்கள், ஊடகங்கள் மீது நடவடிக்கை எடுப்பது சரியல்ல.

ஜெயலலிதாவுடன் அ.தி.மு.கவில் இப்போது இருப்பவர்களை ஒப்பிட முடியாது. கட்சித் தொண்டர்கள் முடிவு செய்து ஓர் இயக்கத்துக்கு தலைவராக இருந்தால்தான் அந்த தலைமையின் கீழ் எல்லோரும் கட்டுப்பட்டு இருப்பார்கள். இப்போது அதுபோன்ற நிலைமைஅங்கு இல்லை. அதனுடைய வெளிப்பாடுதான் மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை முடிவு செய்வதில் தாமதம் ஏற்படுகிறது. கட்சித்தொண்டர்கள் மட்டுமல்ல மக்களும் அவர்களுடைய குறைகளை என்னிடத்தில் கூறுகின்றனர்.

தி.மு.க. ஆட்சிக்கு வந்து ஓராண்டு ஆகிறது. ஆனால் மக்களுக்கு அது எதுவும் செய்யவில்லை என்று சொல்கிறார்கள். அதைப் பார்க்கும்போது ஜெயலலிதாவின் ஆட்சியை நாங்கள் விரைவில் அமைப்போம் என்று நான் சொன்னேன். அதற்கு முதல்படியே மக்களின் கருத்து அமைந்துள்ளது.

கட்சியைப் பொருத்தவரை எல்லாமே தொண்டர்கள்தான். அவர்கள்மீது இருக்கும் நம்பிக்கையில்தான் நான் அ. தி. மு. க. தலைமை ஏற்பேன் என்று சொல்கிறேன். அ. தி. மு. கவில் உள்ள அனைவரும் ஒன்றிணைந்து எனது தலைமையில் செயல்படுவார்கள். அதிமுகவை மீட்கும் சட்டப் போராட்டம் தொடரும் - என்றார். (ஐ)

# இறந்தவரின் ஆவியை அழைக்கும் விநோத சடங்கு வேலூரில் நடந்தது



வேலூர், மே 27

இறந்தவரின் ஆவியை வீட்டிற்கு அழைத்து வரும் விநோத நிகழ்வு ஒன்றை தமிழகத்தின் மலைவாழ் மக்கள் நடத்தியுள்ளனர்.

வேலூர் மாவட்டத்திலுள்ள குருமலை, நச்சிமேடு, வெள்ளக்கல்மலை, பள்ளகொல்லைமலை உள்ளிட்ட மலைக் கிராமங்களைச் சேர்ந்த மலை வாழ்மக்கள் ஆண்டுதோறும் மலையில் உள்ள செல்லியம்மன், தஞ்சியம்மனுக்கு திருவிழா நடத்துகின்றனர்.

எப்போது திருவிழா நடத்தினாலும் அதற்கு முன்பு குறிகேட்டு கடந்தாண்டு விழா நடத்திய பிறகு ஓராண்டில் மலையில் இறந்தவர்கள் மற்றும் வெளியூருக்கு சென்று இறந்தவர்களின் ஆவியை வீட்டுக்கு அழைத்து வந்து விழா நடத்துவது வழக்கம்.

இதன்படி, இந்த ஆண்டு விழா நடத்த, மலையில் ஆண்கள், பெண்கள் என அனைவரும் திரண்டு கோயில் அருகே பொங்கல் வைத்து வழிபட்டனர். தொடர்ந்து, இரவு குறிகேட்டு, பெண்கள் கும்மியடித்தும், கலை ஆடியும் இறந்தவர்களின் ஆவியை கூவி அழைத்தனர்.

மலைவாழ் மக்களில் இறந்தவர்களின் ஆவியை மலையின் நுழைவு வாயிலில் இருந்து மேளதாளத்துடன் கரகம், சீர்வரிசை பொருட்களுடன் ஊர்வலமாக அழைத்து வந்து அவர்கள் இறப்பதற்கு முன்பு வசித்த வீடுகளில் விட்டுச் சென்றனர். அவர்கள் குடும்பத்தினர் இறந்தவர்களின் ஆவியை ஆனந்தக் கண்ணீருடன் வரவேற்றனர்.

இதையடுத்து, மலையிலே ஆடுகள், கோழிகள் பலியிடப்பட்டு சிறப்பு விருந்து அனைவருக்கும் பரிமாறப்பட்டது. தொடர்ந்து, விழாவானது மீண்டும் குறிகேட்க பட்டு அது உத்தரவு தரும் வாரங்களில் நடத்தப்படுகிறது. (ஐ)

# பேரறிவாளனைப் போன்று 6 பேரையும் விடுதலை செய்க!

## முதல்வருக்குக் கடிதம்

மதுரை, மே 27

பேரறிவாளன் விடுவிக்கப்பட்டதுபோல் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற மற்ற 6 பேரையும் விடுதலை செய்ய வேண்டும் என முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கு ரவிச்சந்திரன் கடிதம் எழுதியுள்ளார்.

ரவிச்சந்திரன் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று 32 ஆண்டுகளாக மதுரை மத்திய சிறையில்உள்ளார். தற்போது சிறை விடுப்பில் சொந்த இடத்தில் வசிக்கிறார்.

இந்நிலையில், பேரறிவாளனை போல் ராஜீவ் காந்தி கொலையில் ஆயுள் தண்டனை பெற்ற தான் உட்பட 6 பேரையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ரவிச்சந்திரன் கடிதம் அனுப்பியுள்ளார். (ஐ)

# மக்கள் கோருவார்களாயின் மீண்டும் வருவார் மகிந்த!

## மொட்டு கட்சி அறிவிப்பு



கொழும்பு, மே 27

"மக்கள் கோரிக்கை விடுத்தால், மகிந்த ராஜபக்ஷ மீண்டும் வருவார்." - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டீ.பி. ஹேரத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:

2015 இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தார். எனினும், மக்கள் அவரை மீள அழைத்தனர். அவரும் வந்து, ஆட்சியை பிடித்தார். எனவே, மக்கள் கோரினால் அவர் மீண்டும் வருவார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாம் ஆதரவு வழங்குவோம். தற்போதைய சூழ்நிலையில் இணைந்து பயணிப்பது தான் சிறப்பு." -என்றார். (அ)

# உணவுத் தட்டுப்பாடு மேலும் உக்கிரமாகும்

கொழும்பு, மே 27

இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு மேலும் உக்கிரமடையும் என்று நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர்முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் டி.அபேசிறிவர்தன அபாய எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறுபோகத்துக்குத் தேவையான நடவடிக்கைகள் சில மாவட்டங்களில் தாமதமாகியுள்ளன.

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் செய்கை நடவடிக்கைகள் நிறைவுபெறாவிடின், நாட்டில் உணவுத் தட்டுப்பாடு மேலும் உக்கிரமடையும்.

தற்போது நெற்செய்கையைச் செய்ய முடியாது போனால் மாற்றுப் பயிர்களை விவசாயிகள் பயிரிட வேண்டும்-என்றார். (அ)

# மீன், முட்டை, இறைச்சி விலைகளும் எகிறியது

கொழும்பு, மே 27

நாட்டில் எரிபொருள் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் மீன், இறைச்சி, முட்டை ஆகியவற்றின் விலையும் மேலும் உயர்வடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் முட்டை ஒன்றின் விலை 38 அல்லது 40 ரூபாவாக அதிகரிக்கப்படுமென அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் சரத் அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிப்பு, கோழித் தீவனத்தின் விலை அதிகரிப்பு காரணமாக ஒரு முட்டையின் உற்பத்தி செலவு மாத்திரம் 31 ரூபாயாக அதிகரித்துள்ளது. கோழித் தீவன விலை உயர்வால் சிறு கோழி வியாபாரிகள் பலர் தொழிலை விட்டு வெளியேறியுள்ளனர்.

65 முதல் 70 ரூபாய் வரை விற்கப்பட்ட ஒரு கிலோ கோழித் தீவன உணவுப் பொதியின் விலை 220 ரூபாயாக அதிகரித்துள்ளது. எரிபொருள் விலை உயரும்போது இது மேலும் அதிகரிக்கும்.

பண்ணையாளர்கள் இந்தத் தொழிலில் நிலைத்திருக்க வேண்டுமானால், ஒரு முட்டையை குறைந்தபட்சம் 38 அல்லது 40 ரூபாவுக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுமென அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் சரத் அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# 2 கோடி ரூபா பெறுமதியான ஐஸ் ரக போதைப்பொருளுடன் மூவர் கைது!

கொழும்பு, மே 27

இரண்டு கோடி ரூபா பெறுமதியான ஐஸ் ரக போதைப் பொருளுடன் நீர்கொழும்பில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அவர்களில் ஒருவர் நேற்று முன்தினம் காலை நீர்கொழும்பில் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையில் மற்றுமொரு சந்தேகநபர் நீர்கொழும்பு பஸ் தரிப்பிட பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டார்.

இந்தநிலையில் குறித்த இரண்டு சந்தேகநபர்களிடமும் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையில் மேலும் ஒருவரை நீர்கொழும்பு - ரமணி மாவத்தையில் வைத்து நேற்று முன்தினம் இரவு பொலிஸார் கைது செய்தனர்.

இவ்வாறு கைதானவர்கள் நீர்கொழும்பு மற்றும் மருதானைப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# தமிழ் அரசியல் தலைமைகள் கச்சதீவு குறித்து ஏன் மௌனம்?

## அன்னராசா கேள்வி

யாழ்ப்பாணம், மே 27

தமிழக பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் அண்ணாமலை கச்சதீவு மீள இந்தியா பெறுவது தொடர்பாக தெரிவித்த கருத்துக்கு இதுவரை தமிழ் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏன் மௌனம் சாதிக்கின்றனர் என யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ.அன்னராசா கேள்வி எழுப்பினார்.

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்தபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்ணாமலை கூறிய கருத்து உண்மையா பொய்யா என்பது தொடர்பாகவோ அது எமக்கு சாதகமா பாதகமா என்பதைக்கூட அரசியல் தலைவர்கள் தயங்குகின்றீர்கள்.

உங்கள் தயக்கம் எங்களுக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் அண்ணாமலை வெளிப்படையாகப் பேசுகிறார். நீங்கள் ஏன் மௌனமாக இருக்கிறீர்கள். உங்களால் அதனை வெளிப்படையாக கூறமுடியாமல் இருக்கின்றதா என்பது மீனவர் சமூகத்திலேயே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. கடற்றொழில் அமைச்சர் இந்த செய்தியை மறுத்திருந்தார். அவருடைய கருத்தை நாம் வரவேற்கின்றோம்.

இது தொடர்பாக தமிழ் நாட்டில் மிகப்பெரிய வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றுகொண்டிருக்கும்போது வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 9 பாராளுமன்ற உறுப்பினர்களில் கடற்றொழில் அமைச்சரை தவிர ஒருவர்கூட இது தொடர்பில் பேசவில்லை.

ஏன் மௌனமாக இருக்கிறீர்கள். நாங்கள் உங்களுக்கு வாக்களிக்கவில்லையா? எங்கள் பிரச்னை தொடர்பாக இலங்கை அரசாங்கத்தோடும் இந்திய அரசாங்கத்தோடும் பேசி முடிவு எடுக்காது இருந்தால், இந்த பிரச்னையை தீர்க்க சொல்லி நாங்கள் வேறு யாரிடமும் கையேந்தி கேட்போம். அப்போது எங்களுக்கு முட்டுக்கட்டை போடாதீர்கள்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எங்கள் பிரச்னைகளை பேசுங்கள். இல்லையேல் எங்கள் பிரச்னையை நீங்கள் பேசாமல் விடுங்கள். நாங்கள் துறைசார் அதிகாரிகளுடன் பேசி தீர்வு காணத் தயாராக உள்ளோம்- என்றார். (அ)

# எதிர்வரும் 6 நாள்களுக்குள் காஸ் விநியோகம் ஆரம்பம்

## லாப் எரிவாயு நிறுவனம் அறிவிப்பு

கொழும்பு, மே 27

எதிர்வரும் 6 நாட்களுக்குள் எரிவாயு விநியோகத்தை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக லாப் எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாணயக் கடிதத்தை திறக்க கூடியதாக இருப்பதால், இந்த நடவடிக்கையை எடுக்கவுள்ளதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த சித்திரை புத்தாண்டுக்கு முன்னரான காலப்பகுதி முதல், தமது எரிவாயு கொள்கலன் விநியோகத்தினை லாப் சமையல் எரிவாயு நிறுவனம் இடைநிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அமரகீர்த்தி எம்.பியின் காவலரை சுட்டுக்கொலை செய்தவர் கைது!

கொழும்பு, மே 27

பொலனறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரள வின் தனிப்பட்ட பாதுகாவலரான பொலிஸ் சார்ஜன்ட் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான நபரே பொலிஸ் சார்ஜன்டை சுட்டுக் கொன்றதாகவும், பொலிஸ் சார்ஜன்டின் கைத்துப்பாக்கி கைது செய்யப்பட்டவரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தின்போது சந்தேகநபர் பாராளுமன்ற உறுப்பினரைத் தாக்கியதுடன் அவரது பாதுகாவலர் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக கிடைத்த தகவலின் பேரில் கைது செய்யப்பட்டதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விசாரணையில் தெரியவந்த தகவல்கள், காணொளிகள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் கைது செய்யப்படும் போது சார்ஜன்டின் துப்பாக்கியும் வைத்திருந்தார்.

இம்மாதம் 9ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரளவும், பாதுகாப்பு உத்தியோகத்தரும் வாகனத்தில் பயணித்தபோது சந்தேக நபர்கள் நிட்டம்புவ பிரதேசத்தில் வாகனத்தை நிறுத்தியுள்ளனர்.

முன்னாள் பிரதமருக்கு ஆதரவான அலரி மாளிகைக்கு சென்றதாகக் கூறி, பாராளுமன்ற உறுப்பினர், பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அவர்கள் உயிரிழந்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அவரது பாதுகாவலரை தாக்கி படுகொலை செய்தமை தொடர்பில் இதுவரை 12 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# தந்தை, இரண்டு மகன்கள் குளத்தில் மூழ்கி மரணம்!

கொழும்பு, மே 27

குளத்தில் குளித்துக் கொண்டிருந்த தந்தையும் இரண்டு மகன்களும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இந்தப் பரிதாபச் சம்பவம் மஹியங்கனை - தம்பராவவில் இடம்பெற்றுள்ளது.

குளிக்கச் சென்ற மூவரும் பல மணிநேரமாகியும் வீடு திரும்பாததால் நேற்று முன்தினம் மாலை பிரதேச மக்கள் அந்த இடத்தில் தேடுதல் நடத்தினர். இதன்போது நீரில் மூழ்கி உயிரிழந்த மூவரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

உயிரிழந்தவர்கள் 45 வயதுடைய தந்தையும் அவரது 10 மற்றும் 15 வயதுடைய மகன்களும் ஆவார்கள்.

அவர்களின் சடலங்கள் மஹியங்கனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. (அ)

# பேக்கரி உற்பத்திகளின் விற்பனையில் வீழ்ச்சி

கொழும்பு, மே. 27

கோதுமை மா, சமையல் எரிவாயு மற்றும் உணவுப் பொருட்களின் விலையேற்றம் காரணமாக சமீப நாட்களாக பேக்கரி உற்பத்தி பொருட்களின் விற்பனை குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் உணவகங்களுக்கு வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக இத்தொழிலை நடத்தும் தொழிலதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

ரொட்டி உள்ளிட்ட பேக்கரி பொருட்களின் விலை உயர்வு, பேக்கரி பொருட்களுக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் விலை உயர்வு போன்ற காரணங்களால் கடந்த சில மாதங்களாக விற்பனை சரிந்துள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# வீட்டுத்தோட்டம் செய்யுங்கள்!

## விவசாய திணைக்களம் வேண்டுகோள்

கொழும்பு, மே. 27

வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்ய, வீட்டுத் தோட்டங்களை அமைக்குமாறு பொது மக்களிடம் விவசாய திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இந்த நடவடிக்கை பொதுமக்களின் வாழ்க்கையில் பங்களிக்கும் காரணியாக இருக்கும் என விவசாயப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அஜந்த டி சில்வா தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது உரையாற்றிய கலாநிதி அஜந்த டி சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படும் விதைகள், உரங்கள் மற்றும் இதர பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாய அலுவலர்களின் குடியிருப்புகள் மற்றும் பிற இடங்களில் உற்பத்தியைத் தொடங்கவும், திட்டத்தைச் செயல்படுத்தி முன்னுதாரணமாகச் செயல்படுவது கடமையும் பொறுப்பும் ஆகும்.

உள்ளூர் உணவு உற்பத்தியில் குறைபாடுகள் இருப்பது அனைவரும் அறிந்ததே. நிலவும் நெருக்கடி காரணமாக சில பொருட்களை இறக்குமதி செய்வது மிகவும் கடினமாகி வருகிறது.

அவரை, வெண்டைக்காய், உளுந்து, பூசணி, பாக்கு உள்ளிட்ட கீழ்நாட்டு மரக்கறிகளின் உற்பத்தி அல்லது இருப்புக்கள் தொடர்பான பிரச்னைகள் அல்லது பற்றாக்குறைகள் எதுவும் இல்லை.

எவ்வாறாயினும், நாட்டில் கரட், பீட்ரூட் மற்றும் சாலட் இலைகள் விதைகள் உற்பத்தி செய்யப்படாததால் தட்டுப்பாடு நிலவுகிறது.

இவ்வாறான விதைகளை விரைவாக இறக்குமதி செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளோம் - என்றார். (அ)

# ஒரு வேளை உணவில்லாத மக்களும் இங்கு உள்ளனர்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, மே 27

**சர்வதேச நாணய நிதியத்துடனான கடனுதவிக்கான ஏற்பாட்டை அடுத்த இரண்டு அல்லது மூன்று வாரங்களில் பூர்த்தி செய்ய முயற்சிப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

மக்களின் கோபத்தை என் னால் உணர முடிகிறது. அவர் களில் சிலர் ஒருவேளை உணவையும் காணவில்லை. நடுத்தர வர்க்கத்தை அடைந்த பலர், அதிலிருந்து வெளியேற்றப்படுவதாக உணர்கிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு வார்த்தைகளை துரிதப்படுத்தவும், ஜூன் நடுப்பகுதிக்குள் கடனைப் பெறுவதற்கும் உடன்படுவதாகவும், அதனால் அவசரமாகத் தேவைப்படும் நிதிக்காக மற்ற கடன் வழங்குநர்களை அணுகலாம் என்றும் அவர் கூறினார்.

அரசாங்கம் தனது வரவு - செலவுத் திட்டச் செலவினங் களை "வெறும் எலும்புகளாக" குறைக்கும் என்றும், 2025 ஆம் ஆண்டளவில் மொத்த உள் நாட்டு உற்பத்தியில் 1 வீதம் என்ற முதன்மை உபரியை முறியடிக்கும் என்றும் நம்புவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியம் முழு டொலர் தேவையையும் வழங்காவிட்டாலும், இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் கடன் உறவை ஆரம்பிக்கும் பட்சத்தில் ஏனையவர்கள் உதவுவது இலகுவாக இருக்கும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சீனா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட பலதரப்பு கடனளிப்ப வர்களிடமிருந்தும் கடன் வழங்குபவர்களிடமிருந்தும் உணவு மற்றும் எரிபொருளுக்குச் செலுத்த உதவுவதற்காக அரசாங்கம் இந்த ஆண்டு மொத்தம் சுமார் 4 பில்லியன் டொலர்களை கோருகிறது. தற்போது பல இன்னல்களை எதிர்நோக்கும் மக்களுக்கு ஆதரவளிக்க அனைத்து நட வடிக்கைகளையும் எடுத்து வருவதாக பிரதமர் கூறினார்.

"மக்களின் கோபத்தை என் னால் உணர முடிகிறது. அவர் களில் சிலர் ஒருவேளை உணவையும் காணவில்லை. நடுத்தர வர்க்கத்தை அடைந்த பலர், அதிலிருந்து வெளியேற்றப்படுவதாக உணர்கிறார்கள். மக்கள் வேலையின்றி தவிக்கின்றனர். இரண்டு பருவங்களாக உரம் இல்லாமல் விவசாயிகள் தவிக் கின்றனர்.

நெருக்கடியைத் தீர்க்க, சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன், சீனாவிடம் கடன் மறுசீரமைப்பைப் பெற முயற் சிக்கிறோம்" என பிரதமர் விக்கிரமசிங்க மேலும் குறிப் பிட்டார்.

"நாங்கள் கடன் வலையில் இல்லை. சீன வட்டி விகிதங்கள் அதிகமாக இருப்பதைத் தவிர, ஜப்பான் மற்றும் சீனாவின் கடன்களின் சதவீதம் ஒன்று தான் என்று நான் நினைக்கிறேன்". என்றார் பிரதமர்.

பொருளாதார மறுமலர்ச் சிக்கு மேலதிகமாக, நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

அரசமைப்பின் உத்தேச 21 ஆவது திருத்தத்திற்கு அனைத்து அரசியல் கட்சிகளினதும் பரந்த ஆதரவை எதிர்பார்ப்பதாக பிரதமர் தெரிவித்தார். (அ)

# மகிந்த ராஜபக்ஷவிடம் சி.ஐ.டியினர் வாக்குமூலம்!

கொழும்பு, மே. 27



முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் குற்றப்புலனாய்வு துறையினர் வாக்கு மூலம் பதிவு செய்துள்ளனர்.

மே 9 ஆம் திகதி அலரி மாளிகையில் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த பின்னர் பொதுஜன பெரமுன குண்டர்கள் நிகழ்த்திய கொலைவெறித் தாக்குதல் பெரும் வன்முறை யாக உருவெடுத்தது. நாடு முழு வதும் ஒன்று திரண்டு, பொது ஜன பெரமுன அரசியல்வாதிகளின் சொத்துக்கள் சேதமாக்கப்பட்டன. ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கொல்லப்பட்டார். வன்முறைகளில் சுமார் 10 வரையானவர்கள் உயிரிழந்திருந்தனர்.

இந்த சம்பவம் பற்றி குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இதன் ஓர் அங்கமாக மகிந்த ராஜபக்ஷவிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ)

# வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் அனுப்பும் பணத்தின் அளவில் வீழ்ச்சி!

கொழும்பு, மே 27

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் மாதாந்தம் இலங்கைக்கு அனுப்பும் தொகை 250 மில்லியன் டொலராக குறைவடைந்துள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் சர்வதேச விவகாரங்களுக்கான மேலதிக பொது முகாமையாளர் மங்கள ரந்தெனிய இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இலங்கைக்கு பணம் அனுப்பும் தொகையை துரிதமாக அதிகரிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறு செய்ய வேண்டிய பொறுப்பு இலங்கை தொழிலா ளர்களுக்கு இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், வங்கிகள் ஊடாக இலங்கைக்கு டொலரை அனுப்பும் இலங்கைப் பணியாளர்கள் பல நன்மைகளை அனுபவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)



# தெளிவான புரிதலை பெற்றவுடன் இலங்கைக்கு உதவுவதற்கு தயார்!

## சர்வதேச நாணய நிதியம் அறிவிப்பு

கொழும்பு, மே 27

**இலங்கையின் புதிய பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பாக தெளிவான புரிதலை பெற்றவுடன் இலங்கைக்கு உதவ தயாராக இருப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜார்ஜீவா இலங்கைக்கு ஆதரவளிக்கும் வகையில் பொருளாதாரத் தளம் அமைக்கப்படவேண்டும் என குறிப்பிட்டார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதாரம் தவறான நிர்வாகத்தின் விளைவாக வீழ்ச்சியடைந்துள்ளதாக தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையைக் கண்டு மனம் உடைந்துள்ளதாக அவர் கூறினார்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுவதற்கு எப்போதும் தயாராக இருப்பதாகவும் தொழில்நுட்பக் குழுவொன்று இலங்கையில் ஏற்கனவே செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)



# அமெரிக்கத் தூதுவருடன் எரிசக்தி அமைச்சர் பேச்சு

கொழும்பு, மே 27

எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கும் அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிற்கும் இடை யில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

ருவிட்டர் பதிவொன்றின் ஊடாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த சந்திப்பின்போது, எரிசக்தி துறையில் இலங்கை முன்னெடுக்கவுள்ள மாற்று வழித் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதோடு, தற்போது ஏற்பட்டுள்ள எரி பொருள் நெருக்கடிக்கு தீர்வு காண்பது தொடர்பிலும் கலந் துரையாடப்பட்டதாக அமைச் சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார். (அ)

# இராணுவத்தின் உதவியுடன் பொதுமக்களுக்கு எரிவாயு

## ஆராய்கிறது யாழ். மாவட்ட செயலகம்

யாழ்ப்பாணம், மே 27

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல மக்களுக்கும் தேவையான எரிவாயு வழங்கும் செயற்பாட்டுக்கு யாழ். மாவட்ட லிட்ரோ எரிவாயு விநியோகஸ்தர் ஒத்துழைக்காவிட்டால் ராணுவத்தினரின் உதவியுடன் பொது மக்களுக்கான எரிவாயுவை விநியோகிக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் குடும்ப பங்கீட்டு அட்டைக்கு எரிவாயு விநியோகிக்க மாவட்ட செயலகத்தினால் முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஆயினும் யாழ். மாவட்ட எரிவாயு பிரதான விநியோகஸ்தர் ஒத்துழைப்பு வழங்கத் தவறியுள்ளதன் காரணமாக இராணுவத்தின் உதவியுடன் எரிவாயு சிலிண்டர்களை பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்கு ஆலோசிக்கப்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட செயலக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வாரம் லிட்ரோ காஸ் நிறுவனத்தினரால் நாடு பூராகவும் எரிவாயு விநியோகிக்கப்பட்டு வரும் நிலையில் யாழ். மாவட்டத்தில் எரிவாயுவை பங்கீட்டு அட்டைக்கு விநியோகிக்க முற்பட்டபோது யாழ். மாவட்ட லிட்ரோ எரிவாயு விநியோகஸ்தர்கள் ஒத்துழைப்பு தரவில்லை என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எனினும் எதிர்வரும் நாட்களில் பிரதேச செயலகங்கள் ஊடாக கிராம சேவையாளர்களின் ஒத்துழைப்புடன் குடும்ப அட்டை மூலம் எரிவாயு விநியோகம் இடம்பெறவுள்ளதாகவும், அதேவேளை எரிவாயு சிலிண்டர் விநியோகிக்கும் போது எரிவாயு விநியோகஸ்தர்களால் இடையூறு ஏற்படுத்தப்படும் என்பதை கருத்திற்கொண்டு இராணுவத்தின் உதவியை பயன்படுத்தி குறித்த எரிவாயு சிலிண்டரை பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். மாவட்ட செயலக உள்ளகத் தகவல்கள் தெரிவித்தன. (அ-03)

# அரசியல் ஆதரவில் நியமிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகளை நீக்குங்கள்!

## பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவு

கொழும்பு, மே 27

அனைத்து பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரி பதவிகளுக்கு மீண்டும் விண்ணப்பங்களை பெற்று தகுதியான அதிகாரிகளை நியமிக்குமாறும், அரசியல் ஆதரவு காரணமாக பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளாக நியமிக்கப்பட்டவர்களை நீக்குமாறும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்னவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இரண்டு வாரங்களுக்குள் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளுமாறும் அவற்றின் மிகவும் திறமையான பொலிஸ் அதிகாரிகளை பொறுப்பதிகாரிகளாக தெரிவு செய்து, அது சம்பந்தமான அறிக்கையை தனக்கு வழங்குமாறும் அமைச்சர், பொலிஸ் மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இலங்கையில் உள்ள 184 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளில் 182 பேர் அந்த பதவிகளுக்கு தகுதியற்ற அதிகாரிகள் என பொலிஸ் மா அதிபர் விக்ரமரத்ன ஒரு மாதத்துக்கு முன்னர் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் தெரிவித்திருந்தார்.

தனது பரிந்துரைகளை கவனத்தில் கொள்ளாது, கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் நவம்பர் 3 ஆம் திகதி வரையான காலத்தில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்த அதிகாரிகளில் 126 பேர் எவ்வித நேர்முகப் பரீட்சையும் நடத்தப்படாமல் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும் மூன்று பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் நேர்முகப் பரீட்சையில் தோல்வியடைந்தவர்கள் எனவும் பொலிஸ் மா அதிபர் தனது கடிதத்தில் கூறியிருந்தார். (அ)

# ‘21’ குறித்து இன்று விசேட கூட்டம்

கொழும்பு, மே 27

உத்தேச 21 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இன்று விசேட கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும் சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர்.

உத்தேச 21 ஆவது திருத்தச் சட்டமூலம் கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பில் கட்சித் தலைவர்களின் கருத்துகளை உள்வாங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதற்கமையவே இன்றைய கூட்டம் நடைபெறுகின்றது. அதன்பின்னர் 21 ஆவது திருத்தச்சட்டமூலம் திருத்தப் பட்டு, திங்கட்கிழமை அமைச் சரவையில் மீண்டும் முன்வைக் கப்பட்டு, அனுமதி பெறப்படும். (அ)

# பெண் குரலில் உரையாடி பணம் மோசடி செய்த இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், மே 27

கைபேசியில் செயலியை உபயோகித்து பெண் குரலில் பேசி ஏமாற்றி, ஆண்களிடம் பணம் பறித்த குற்றச்சாட்டில் வட்டுக்கோட்டையைச் 26 வயது இளைஞர் ஒருவர் யாழ். நகரப் பகுதியில் வைத்து நேற்று யாழ். மாவட்ட புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த ஒருவருக்கு வந்த கைபேசி அழைப்பில் பெண் ஒருவர் உரையாடியுள்ளார். அதன் பின்னர் அவர்கள் தொடர்ச்சியாக உரையாடியுள்ளனர். பின்னர் அவர்கள் அந்தரங்கப் படங்களைப் பரிமாறிக் கொண்டுள்ளனர்.

அதன்பின்னர் கைபேசியில் பேசிய பெண், அந்த நபரை மிரட்டி ஒன்றரை இலட்சம் ரூபாய் பறித்துள்ளார். பின்னரும் மிரட்டி ஒரு இலட்சம் ரூபா கேட்டுள்ளார். இதில் சந்தேகமடைந்த அந்த நபர், இது தொடர்பில் யாழ். மாவட்ட புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

கைபேசியில் பேசிய பெண்ணிடம், வங்கியில் பணம் வைப்புச் செய்ய முடியாது என்றும், நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டது. யாழ். நகரப் பகுதியில் பணத்தைப் பெற்றுக்கொள்ள வந்த 26 வயது இளைஞர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

விசாரணையில் அந்த இளைஞரே பெண் குரலில் பேசி ஏமாற்றியமை தெரியவந்துள்ளது. இந்த இளைஞர் ஏற்கனவே நால்வரிடம் இவ்வாறு பேசி நான்கு இலட்சம் ரூபாவுக்கும் மேல் பறித்துள்ளமை தெரியவந்துள்ளது என்று பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட இளைஞரிடம் இருந்து நான்கு கைபேசிகளும், ஒரு இலட்சம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது. விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மகிந்த கடவுச்சீட்டை ஒப்படைக்கவில்லை

கொழும்பு, மே 27

கோட்டா கோ கம மற்றும் மைனா கோ கம தாக்குதல் வழக்குகள் தொடர்பாக வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் இதுவரை தமது கடவுச்சீட்டை நீதிமன்றில் சமர்ப்பிக்கவில்லை என மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஆயிஷா ஜினசேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான வழக்கு கோட்டை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான பவித்ரா வன்னியாராச்சி, நாமல் ராஜபக்ஷ, சஞ்சீவ எதிரிமான்ன மற்றும் ரோஹித அபேகுணவர்தன ஆகியோர் தமது கடவுச்சீட்டை நீதிமன்றில் ஒப்படைத்துள்ளனர் என அவர் இதன்போது கூறினார்.

எனினும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், மகிந்த கஹந்தகம மற்றும் பலர் இதுவரை தமது கடவுச்சீட்டை நீதிமன்றில் ஒப்படைக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

மேலும் சந்தேகநபர் சனத் நிஷாந்தவின் கடவுச்சீட்டு வழக்கு ஒன்று தொடர்பில் வேறு நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் ரேணுகா பெரேரா ஆகியோர் தமது கடவுச்சீட்டுகள் அழிந்துள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் தெரிவித்துள்ளனர். (அ)

# அமெரிக்க பாடசாலையில் துப்பாக்கி சூடு:

## 19 குழந்தைகள், ஓர் ஆசிரியர் உட்பட 20க்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு




அமெரிக்காவின் தெற்கு டெக்சாஸில் உள்ள தொடக்கப்பள்ளி ஒன்றில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 18 குழந்தைகள், ஓர் ஆசிரியர் உட்பட 19க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

### என்ன நடந்தது

அமெரிக்காவில், தெற்கு டெக்சாஸின் யுவால்டே நகரில் உள்ள தொடக்கப்பள்ளி ஒன்றில், 18 வயது துப்பாக்கிதாரி ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார். பின் இவர், காவல்துறையால் கொல்லப்பட்டுள்ளார் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த சந்தேகநபர் கைத்துப்பாக்கி ஒன்றையும் AR-15 ரக துப்பாக்கி ஒன்றையும் வைத்திருந்ததாக புலனாய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டின் தொடக்கத்தில் வாலிபர் தனது பாட்டியை சுட்டுக் கொன்றதாக சந்தேகிக்கப்படுகிறது. மேலும், அவர் அப்பகுதியில் உள்ள உயர் நிலைப் பள்ளி மாணவராக இருக்கலாம் என்றும் உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க நேரப்படி செவ்வாய்க்கிழமை 11:32 மணிக்கு இந்த துப்பாக்கிச் சூடு தொடங்கியது, மேலும் தாக்குதல் நடத்தியவர் "இந்த சம்பவத்தின் போது தனியாகச் செயல்பட்டார்"



என்றும் புலனாய்வாளர்கள் தெரிவித்தனர்.

### இதுவரை 19க்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

இந்த சம்பவத்தில், 19 குழந்தைகள், ஓர் ஆசிரியர் உட்பட 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொல்லப்பட்ட ஆசிரியையின் பெயர் ஈவா மிரெலெஸ் என்று அமெரிக்க ஊடகங்களில் தெரிவிக்கப்படுகிறது. அவருக்கு கல்லூரியில் ஒரு மகள் இருப்பதாகவும், ஓட்டம் மற்றும் நடைபயணத்தை அவர் விரும்புவதாகவும் கல்வி மாவட்ட இணைய தளம் தெரிவிக்கிறது.




அதேசமயம், உயிரிழப்பு எண்ணிக்கை 21 ஆக உயர்ந்துள்ளது என காவல்துறையைக் குறிப்பிட்டு அமெரிக்க ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவம் நடைபெற்றபோது, அமெரிக்க எல்லைக் கண்காணிப்புப் படை யைச் சேர்ந்த காவல் அதிகாரி ஒருவர் சற்று தொலைவில் இருந்துள்ளார். அவர்தான், துப்பாக்கிச்சூடு நடத்திய நபரை, விரைந்து சென்று சுட்டுள்ளார் என்று "அசோசியேட்டட் பிரஸ்" செய்தி முகமை தெரிவிக்கிறது.

சிபிஎஸ் செய்தியின்படி, துப்பாக்கிச் சூடு நடத்திய நபர், பாதுகாப்புக்கவச உடை அணிந்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த மே 18ஆம் திகதி, நியூயார்க் பபல்லோ பகுதியில் ஒரு மளிகைக்கடையில் துப்பாக்கிச் சூடு நடந்தபோதும், துப்பாக்கிச்சூடு நடத்தியதாக சொல்லப்பட்ட சந்தேக நபர், கைத்துப்பாக்கியுடன் பாதுகாப்பு உடை அணிந்திருந்தார்.

### அமெரிக்க அதிபர் ஜோ பைடன்

இது தொடர்பாக, வெள்ளை மாளிகையின் ரூஸ்வெல்ட் அறையில் இருந்து பேசிய அமெரிக்க அதிபர் ஜோ பைடன், இந்தக் குழந்தைகளுக்காக அமெரிக்கர்கள் பிரார்த்தனை செய்யும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

வெள்ளை மாளிகையின் ரூஸ்வெல்ட் அறையிலிருந்து உரையாற்றிய அவர், "ஏதுமறியாத அழகிய குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன், ஒரு போர்க்களத்தைப் போல, தன் நண்பர்கள் கொல்லப்பட்ட காட்சியையும் குழந்தைகள் நேரில் பார்த்துள்ளனர்.

இனி காலம் முழுக்க இதே நினைவுகளுடன் இந்தக் குழந்தைகள் வாழ வேண்டியிருக்கும்" என்று பேசினார்.

சம்பவம் குறித்து இப்படி பேசிய ஜோ பைடனிடம், இதற்கு பிறகு டெக்சாஸ் செல்வீர்களா என்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளிக்கவில்லை.

(பிபிசி)

## மே மாதத்தில் மட்டும் 5 துப்பாக்கிச் சூடுகள்!

அமெரிக்காவில் டெக்சாஸ் மாகாணத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 20க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இந்த சம்பவம் உலகம் முழுக்க பரவலான கவனத்தை ஈர்த்துள்ளது. ஆனால், இந்த மே மாதத்தில் மட்டும் அமெரிக்காவில் 5 இடங்களில் துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நடந்துள்ளன. இந்த 5 சம்பவங்களால் மட்டும் இதுவரை 30க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

### எந்தெந்தெ திகதிகளில் என்ன நடந்தது? சுருக்கமான பட்டியல்:

**மே 13**

அமெரிக்காவின் விஸ்கான்சின் பகுதியில் உள்ள மெல்வாக்கி நகரில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 16 பேர் காயமடைந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக, 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

**மே 14**

அடுத்த சம்பவம் அடுத்த நாளே நடந்தது. மே 14ஆம் திகதி நியூயோர்க்கின் பப்பலோ நகரில் உள்ள மளிகைக்கடை ஒன்றில் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இனவெறி காரணமாக நடத்தப்பட்டதாக சொல்லப்பட்ட இந்த துப்பாக்கிச் சூட்டில், 10 பேர் உயிரிழந்ததுடன் மூவர் காயமடைந்தனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்திய நபர் காவல்துறையால் கைது செய்யப்பட்டார். விசாரணையின்போது, தான் இன்னும் அதிகமான கருப்பின மக்களை கொல்ல வேண்டும் என்று திட்டமிட்டிருந்ததாக தெரிவித்தார் என்று காவல்துறை தெரிவித்தது.

**மே 15 (ஒரே நாளில் இரண்டு)**

அடுத்த ஒரே நாளில் இரண்டு துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் அரங்கேறின.

கலிபோர்னியாவில் உள்ள தைவானிய தேவாலயம் ஒன்றில் நடத்தப்பட்ட இந்த துப்பாக்கி சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். நால்வர் காயமடைந்தனர்.

அதே நாளில், டெக்சாஸ் மாகாணம் ஹூஸ்டன் நகரில் உள்ள சந்தை ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இருவர் கொல்லப்பட்டனர். மூவர் காயமடைந்தனர். 5 பேருக்குள் தொடங்கிய சண்டையால் இந்த துப்பாக்கிச் சூடு நடந்ததாக அப்போது தெரிவிக்கப்பட்டது.

**மே 25**

உலக கவனத்தை ஈர்க்கும் அளவுக்கு 20க்கும் மேற்பட்ட உயிரிழப்புகளை ஏற்படுத்திய துப்பாக்கிச் சூடு மே 25ஆம் திகதி நடைபெற்றது. டெக்சாஸ் மாகாணம் யுவால்டே பகுதியில் உள்ள தொடக்கப்பள்ளியில் நடத்தபட்ட இந்த துப்பாக்கிச் சூடு நாடு முழுக்க பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்த சம்பவத்தின் சந்தேக நபர், காவல்துறையால் சுட்டுக்கொல்லப்பட்டார். துப்பாக்கிச் சூட்டுக்கான நோக்கம் இன்னும் தெளிவாகத் தெரியவரவில்லை.

இப்படியாக, அமெரிக்காவில் இந்த மே மாதத்தில் மட்டும் 5 இடங்களில் பொதுவெளிகளில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளன. மே 25ஆம் திகதி டெக்சாஸின் பள்ளியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டிலும் 14ஆம் திகதி நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டிலும் சந்தேக நபர்கள் வணிக ரீதியிலான (கடைகளில் வாங்கக்கூடிய) கைத்துப்பாக்கியை வைத்திருந்தனர்.

# இலங்கை தேறுவது கடினம்!

## தமிழக தினமணி தலையங்கம்!



இரண்டாண்டு கால கொள்ளை நோய்த்தொற்றுப் பரவலால் சுற்றுலா முடக்கம், செயற்கை உரங்கள் தடை செய்யப்பட்டதால் விவசாய உற்பத்தி வீழ்ச்சி, வரவுக்கு மீறி கடன் வாங்கியதால் பொருளாதாரத் தேக்கம், ஆட்சியாளர்களின் நிர்வாகச் சீர்கேட்டால் நிலையற்ற தன்மை, சீனாவை அதிகப்படியாகச் சார்ந்திருந்ததால் ஏற்பட்ட கடன்சுமை ஆகியவை இலங்கையை நிலைகுலையச் செய்துள்ளன.

இன்றைய திகதியில் இலங்கையில் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை ரூ. 5,000 அதற்கும் பல மணி நேரம் காத்திருக்க வேண்டும். பெட்ரோல், டீசல் வாங்க கேன்களுடன் 12 மணிநேரத்துக்கு மேல் தெருக்களில் பொதுமக்கள் காத்திருக்கிறார்கள். இந்நிலையில், "துறைமுகங்களில் காத்திருக்கும் எரிபொருள் தாங்கிகளை இறக்க அந்நிய செலாவணி கையிருப்பு இல்லை" என்று அந்நாட்டின் எரிசக்தித் துறை அமைச்சர் காஞ்சனா விஜயசேகர கூறியிருக்கிறார்.

எரிபொருள் தட்டுப்பாட்டால் நாட்டில் பல மணிநேர மின்வெட்டு நிலவுகிறது. ஹோட்டல்களும், பள்ளிகளும் மூடப்பட்டு விட்டன. அரசு அலுவலகங்கள் குறைவான ஊழியர்களுடன் இயங்குகின்றன. அத்தியாவசிய மருந்துகள் இல்லாததால் மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சைப் பிரிவுகள்கூட முடங்கியிருக்கின்றன. இவையெல்லாம் போதாது என்று, அரசு மீதான அதிருப்தியில் நாட்டு மக்கள் ஆங்காங்கே நடத்தும் போராட்டங்கள் வன்முறையாக வடிவெடுத்துள்ளன.



தட்டுப்பாடு காரணமாக உணவுப் பொருட்கள், மருந்துகள், எரிபொருள்கள் ஆகியவற்றின் விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. நாட்டின் பணவீக்கம் 30 வீதத்தை தாண்டி விட்டது. விரைவில் இது 40 வீதத்தை எட்டும் என்று எச்சரிக்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள். இவை அனைத்துக்கும் காரணம், வரவுக்கு மீறி வாங்கப்பட்ட கடன் தான்.

உலக வங்கி, சர்வதேச நிதியம் மட்டுமல்லாது சீனா, ஜப்பான் போன்ற நாடுகளிடமிருந்து இலங்கை வாங்கிய கடன் தொகையின் ஒட்டு மொத்த மதிப்பு கடந்த மே 20 நிலவரப்படி 51 பில்லியன் டாலராக உயர்ந்திருக்கிறது. இந்தக் கடனுக்கான தவணைத்தொகையையோ, வட்டித் தொகையையோ திருப்பித் தரும் நிலையில் இலங்கை இல்லை. இதை சென்ற மாதமே அந்நாட்டு அரசு தெரிவித்துவிட்டது.

குறிப்பாக, உணவுப் பொருட்களுக்காக கடன் பத்திரங்களில் வாங்கிய ரூ.94,000 கோடி கடனுக்கு உடனே செலுத்த வேண்டிய ரூ.585 கோடி வட்டியை அளிப் பதற்கான கால அவகாசம் கடந்த மே 18 உடன் முடி வடைந்து விட்டது. "பொரு ளாதார சீர்குலைவு, அந்நிய செலாவணி இன்மை போன்ற நெருக்கடிகளால் வாங்கிய கடனுக்கான வட்டியை திருப்பிச் செலுத்த வாய்ப்பில்லை" என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கே மே 20-இல் அறிவித்திருக்கிறார். இது கிட்டத்தட்ட திவால் ஆன நிலைதான்.

இலங்கையின் மொத்தக் கடனில் சுமார் 10 வீதம் சீனாவிடமிருந்து வாங்கியதாகும். தவிர, இலங்கையின் பல உள்கட்டமைப்புத் திட்டங்களில் சீனா பல பில்லியன் டாலரை முதலீடு செய்துள்ளது. குறிப்பாக, முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபட்சவின் சொந்த ஊரான அம்பந்தோட்டாவில் துறைமுக விரிவாக்கத்தில் நிபுணர்களின் எச்சரிக்கையை மீறி, சீனாவுக்கு ராஜபட்ச அளித்த அனுமதி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அங்கு மட்டும் 1.1 பில்லியன் டாலரை சீனா முதலீடு செய்துள்ளது. ஆனால், இத்துறைமுகத்தால் இலங்கை நாட்டுக்கு எந்தப் பயனும் இல்லை. தற்போது அதனை சீனாவே 98 ஆண்டு குத்தகைக்கு எடுத்துக் கொண்டிருப்பது, கந்துவட்டிக்காரர்களையே நினைவுபடுத்துகிறது.

கவர்ச்சிகரமான திட்டங்களில் மயங்கியும் அதில் கிடைக்கும் லஞ்சத்துக்காகவும் இலங்கை ஆட்சியாளர்கள் வெளிநாடுகளில் கடன் வாங்கியதன் விளைவை அம்பந்தோட்டா துறைமுக கபளீ கரம் காட்டுகிறது. இதே போல பல்வேறு திட்டங்களில் சீனாவின் கடன்வலை இலங்கையை இறுகப் பற்றியிருப்பதாக வல்லுநர்கள் கூறுகின்றனர். இன்று இலங்கை பொருளாதார வீழ்ச்சியில் சிக்கித் திணறும் போது, ஏதுமறியாதது போல சீனா வேடிக்கை பார்க்கிறது. அந்நாட்டுக்கு, இலங்கையில் செய்த முதலீடுகள் குறித்து மட்டும்தான் கவலை.

> கவர்ச்சிகரமான திட்டங்களில் மயங்கியும் அதில் கிடைக்கும் லஞ்சத்துக்காகவும் இலங்கை ஆட்சியாளர்கள் வெளிநாடுகளில் கடன் வாங்கியதன் விளைவை அம்பந்தோட்டா துறைமுக கபளீகரம் காட்டுகிறது.

சர்வதேச நிதியத்திடம் கடனுதவி பெற இலங்கை அரசு முயன்று வருவதாகத் தெரிகிறது. இலங்கை எதிர்பார்க்கும் அளவுக்கு கடனுதவி கிடைக்க வாய்ப்பில்லை என்பது இலங்கைக்கும் தெரியும். ஆனால், இந்தக் கடனை நம்பித்தான் இலங்கையின் எதிர்காலம் இருக்கிறது.

அந்நிய செலாவணிக் கையிருப்பு முற்றிலும் கரைந்துள்ள சூழலில், வரவுக்கு எந்த உத்தரவாதமும் இல்லாத நிலையில் இலங்கை கடைத்தேறுவது கடினம் என்றே தோன்றுகிறது. மேலும் மேலும் கடன் வாங்குவது ஒன்று மட்டுமே இலங்கை முன்னுள்ள உடனடித் தீர்வாகக் காட்சி அளிக்கிறது.

"வரக்கூடிய இரண்டு மாதங்கள் இலங் கைக்கு மிக மோசமான காலகட்டமாக இருக்கும்" என்று அந்நாட்டு பிரதமர் ரணில் விக்ரமசிங்க கூறியிருப்பது சிக்கலின் தீவிரத்தைக் காட்டுகிறது.

அண்மையில் இலங்கைக்கு 50 மில்லியன் கடன் வழங்கு வதாக உலக வங்கி அறிவித் தது. இது யானைப்பசிக்கு சோளப் பொரி போன்றது தான். கனடா உள்ளிட்ட ஜி 7 நாடுகள் இலங்கைக்குக் கடனு தவி அளிப்பது குறித்துப் பரிசீலித்து வருகின்றன.



இந்தியா ஏற்கெனவே 1.5 பில்லியன் உடனடி கடனுதவி அளித்துள்ளது. தவிர, உணவுப் பொருட்கள், அத்தியாவசிய மருந்துகள், எரிபொருட்களை அவசர உதவியாக அளித்து வருகிறது.

பிற நாடுகள் அளிக்கும் கடனுதவிக்கும், நெருங்கிய நட்பு நாடான இந்தியா அளிக்கும் நிதியுதவிக்கும், பொருளுதவிக்கும் உள்ள வேறுபாட்டை இலங்கை உணர்ந்திருக்கும்.

**(தினமணி)**

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

**மாதிரிப் பரீட்சை வினாத்தாள்**


● **1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.**


01. வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.



(1) (2) (3)

02.





(1) (2) (3)

03. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.




இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E

04. **“பல்கலைக்கழகம்”** எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்

(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்

(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்


05. சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

06. உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)

07. உலக மரபுரிமை மையங்களாக ......................... நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், .............................. போன்றவை சில இடங்களாகும்.

முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.


(1) யுனிசெப், காலிக்கோட்டை

(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை

(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்

01. (3) 

02. (1) 

03. (3) C, F / B, D / A, E

---

**27.05.2022**
**வெள்ளிக்கிழமை**

கல்வி tv CHANNEL-1

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

---

**27.05.2022**
**வெள்ளிக்கிழமை**

கல்வி tv CHANNEL - 2

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு



# வைத்தியசாலை நிர்வாகத்துக்கு எதிராக ஊழியர் இன்று கவனவீர்ப்பு போராட்டம்!

மட்டக்களப்பு, மே. 27

**அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற சுகாதார ஊழியர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவு குறைப்புக்கு எதிராகவும் அதனை வழங்கக்கோரியும் ஒரு மணிநேர கவனவீர்ப்பு போராட்டத்தை இன்று முன்னெடுக்கவுள்ளதாகவும் வைத்தியசாலையின் சுகாதார தொழில்வல்லுனர்கள் ஒன்றியத்தின் தலைவரும், தாதிய உத்தியோகத்தருமான ஏ.ஆர்.விஷாம் தெரிவித்தார்.**

வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இன்று காலை 9.30 மணி தொடக்கம் 10.30 மணிவரை வைத்தியசாலைக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது நாட்டில் நிலவும் எரிபொருள் பற்றாக்குறை மற்றும் விலையேற்றம் போன்ற பல பிரச்னைகளுக்கு மத்தியில் தாதிய உத்தியோகத்தர்கள், மருத்துவ ஆய்வாளர்கள், ஒளிப்பதிவு இயக்குநர்கள், மருத்துவ மாதுக்கள், ஈ.சி.ஜி. தொழில்நுட்பவியலாளர்கள், கண்பார்வை தொழில் நுட்பவியலாளர்கள் ஆகியோர் வைத்தியசாலைக்கு வருகை தந்து தங்களின் கடமைகளில் எவ்வித குறைகளுமின்றி பொதுமக்களுக்கான சேவைகளை வழங்கி வருகின்ற நிலையில் அவர்களின் முழுமையான மேலதிக நேரக் கொடுப்பனவை வைத்தியசாலை நிர்வாகம் வழங்க மறுத்துள்ளது.

கடந்த 13 ஆம் திகதி அரசினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைய, வைத்தியசாலையின் நிர்வாகத்திடம் கலந்துரையாடியபோது, அவரவர்களின் அடிப்படைச் சம்பளத்திற்கேற்ப எல்லோருக்கும் சமமாக முழுமையான மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்று தெரிவித் திருந்தனர்.

ஆயினும் கடந்த ஏப்ரல் மாதக் கொடுப்பனவை முழுமையாக வைத்தியர்களுக்கு மட்டும் வழங்கிவிட்டு ஏனைய சுகாதார ஊழியர்களுக்கு பூரணமாக வழங்க மறுத்துவிட்டனர்.

அரசினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு முரணாகவும், வைத்தியர்களைத் தவிர ஏனைய சுகாதார ஊழியர்களுக்கு பாரபட்சம் காட்டும் செயற்பாடுகளை வைத்தியசாலை நிர்வாகத்தினர் முன்னெடுத்து வருவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

எங்களுக்கான சரியான தீர்வை எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் வழங்கவேண்டும். இல்லையெனில் தொழிற்சங்க போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்-என்றார். (அ)

# கால நீடிப்பு செய்யப்பட்ட சபைகளை கலையுங்கள்!

## உள்ளூராட்சி உறுப்பினர்கள் மகஜர்

அம்பாறை, மே. 27

கால நீடிப்பு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களை கலைக்க கோரி அம்பாறை மாவட்ட காரைதீவு பிரதேச சபையின் உறுப்பினர்கள் ஆறு பேர் கையெழுத்திட்ட மகஜரொன்றை கிழக்கு மாகாண ஆளுநர், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

பிரதேச சபையின் உப தவிசாளர் ஏ.எம். ஜாஹிர் (ஸ்ரீ.ல. சு. கட்சி), உறுப்பினர்களான ஏ.ஆர். எம். பஸ்மீர், கே.குமாரஸ்ரீ, எஸ். நேசராஜா, எம். ஜலீல், கே.ஜெய தாஸன் ஆகியோர் ஒப்பமிட்டு அனுப்பிவைத்துள்ள மகஜரில்-

கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின்கீழ் இயங்குகின்ற உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுட்காலமானது கடந்த 2022 பெப்ரவரி மாதத்துடன் நிறைவு பெற்ற போதும் தற்போதைய அரசாங்கத்தினால் மேலும் ஒரு வருடம் நீடிக்கப்பட்டு 2023 பெப்ரவரி வரை அதன் ஆயுட்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

தற்போது எமது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையிலும் உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள உறுப்பினர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு உள்ளிட்ட பல வரப்பிரசாதங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே நாட்டின் நிலைமையை கருத்தில் கொண்டு கால நீடிப்பு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களை கலைத்து அதனூடாக கிடைக்கும் கொடுப்பனவுகளை மக்களின் செயல்திட்டங்களுக்காக பயன்படுத்த காரைதீவு பிரதேச சபையின் உறுப்பினர்களாகிய நாங்கள் எமது முழு சம்மதத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்-என் றுள்ளது. (அ)

# மட்டக்களப்பு வாவிக்கு ஆபத்து



மட்டக்களப்பு, மே. 27

இலங்கையின் இரண்டாவது மிகப்பெரிய வாவியான மட்டக்களப்பு வாவி, பெருகிவரும் ஆற்று வாழைத் தாவரங்களால் அழிவடைந்து வருவதுடன், மீனவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் குறித்த வாவியில் மீன்கள் பாடலிசைத்ததால், "பாடும் மீன்கள் வாழும் வாவி" என குறித்த வாவி சர்வதேச புகழ் பெற்றது.

மட்டக்களப்பு வாவியில் சுமார் 15 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. தற்போது ஆற்றுவாழைத் தாவரங்களின் பெருக்கத்தால் தோணிகளைத் தள்ள முடியாமல் மீனவர்கள் அவதியுறுகின்றனர்.

எனவே, வாவியை அழித்துவரும் ஆற்று வாழைகளை உடனடியாக அகற்றித் தருமாறு, மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளராக மோகனகுமார்



அம்பாறை, மே. 27

அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றிய கே.பாக்கியராஜ் அண்மையில் நகர அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் நாயகமாக பதவி உயர்வு பெற்றுச் சென்றதை அடுத்து திட்டமிடல் சேவையில் முதலாம் தரத்தைச் சேர்ந்த டீ.மோகனகுமார் அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் காரைதீவு பிரதேச செயலகத்தில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றிய நிலையில் இப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

நாவிதன்வெளி, திருக்கோவில், கல்முனை, அம்பாறை போன்ற பிரதேச செயலகங்களில் உதவி, பிரதித் திட்டமிடல் பணிப்பாளராகவும் இவர் கடமையாற்றியுள்ளார்.

இவர் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார். (அ)

# பரீட்சையில் ஆள்மாறாட்டம் கல்முனையில் ஒருவர் கைது

அம்பாறை, மே. 27

பரீட்சையின்போது சகோதரனுக்கு பதிலாக ஆள்மாறாட்டத்தில் ஈடுபட்டவரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் க.பொ.த சாதாரண பரீட்சை கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்துள்ள நிலையில், அம்பாறை மாவட்டம் கல்முனை வலயக்கல்வி பணிமனைக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றிலே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் குறித்த பரீட்சார்த்தி சமய பாடப் பரீட்சையை சகோதரனுக்கு பதிலாக எழுதியதுடன், தனது அடையாள அட்டையின் புகைப்படத்தை மாற்றியுள்ளமை விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

அத்துடன் இச்சம்பவத்தில் ஒரே முகத் தோற்றமுடைய இரண்டு சகோதரர்களும் தத்தமது அடையாள அட்டையில் மாற்றம் செய்து இந்த ஆள்மாறாட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன், 32 வயதுடைய தனது சகோதரனுக்கு பதிலாக 28 வயதுடைய தம்பி இவ்வாறு பரீட்சை எழுதி சிக்கியுள்ளார்.

மேலும், கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட மருதமுனை பகுதியில் உள்ள பிரபல பாடசாலையிலும் ஆள்மாறாட்டம் செய்து பரீட்சை எழுதிய சந்தேக நபரை பெரிய நீலாவணை பொலிஸார் கைது செய்து கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது இரண்டு நாட்கள் சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (அ)

# பாடசாலையில் புதைக்கப்பட்ட கைக்குண்டு மீட்பு


திருகோணமலை, மே 27

திருகோணமலை - குச்சவெளி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் புதைக்கப்பட்ட நிலையில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

குச்சவெளி அந்நூரிய்யா பாடசாலையின் மைதானத்திலேயே இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டது.

அந்நூரிய்யா பாடசாலை வளாகத்தின் மைதானத்தில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருக்கும் போது புதைக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட கைக்குண்டு தொடர்பில் பிரதேசவாசிகள் குச்சவெளி பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

இதைத் தொடர்ந்து நீதிமன்ற உத்தரவிற்கு விசேட அதிரடிப் படையின் உதவியுடன் அமைய கைக்குண்டை மீட்டு செயலிழக்கச் செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



## மருத்துவமனையில் தீ; 11 சிசுக்கள் கருகிப் பலி!

### செனகல் நாட்டில் துயரம்

டக்கர், மே 27

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான செனகல் மருத்துவமனை ஒன்றின் பிரசவ விடுதியில் புதன்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் பிறந்து ஓரிரு நாட்களேயான 11 பச்சிளம் குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்தன.

செனகல் தலைநகர் டக்கருக்கு கிழக்கே 120 கி.மீ. தொலைவில் உள்ள டிவௌவான் நகர பிராந்திய மருத்துவமனையிலேயே இந்தத் துயரம் நிகழ்ந்ததாக செனகல் ஜனாதிபதி மேக்கி சால் தெரிவித்தார்.

இந்த விபத்து குறித்து அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன் என ஜனாதிபதி மேக்கி சால் ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

இந்தத் தீ விபத்துக்கான காரணம் குறித்து ஆராய உடனடி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக செனகல் சுகாதார அமைச்சர் அப்துலே டியோப் சார் ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்தார்.

ஜெனிவாவில் உலக சுகாதார அமைப்பின் கூட்டத்தில் பங்கேற்கச் சென்றுள்ள அவர், பயணத்தை சுருக்கிக்கொண்டு உடனடியாக செனகல் திரும்புவதாக அறிவித்துள்ளார். (ஐ)

## பசுபிக் பிராந்தியத்தில் ஆதிக்கம்; சீனாவும் ஆஸியும் தீவிர போட்டி!


சிட்னி, மே 27

தென் பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம் குறித்து அமெரிக்காவும் அவுஸ்திரேலியாவும் அக்கறை கொள்ளத் தொடங்கியுள்ள நிலையில் சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீ நேற்று வியாழக்கிழமை அதிகாலை சாலமன் தீவுகளை அடைந்தார்.

பசுபிக் பிராந்தியத்தில் 8 நாடுகளுக்கு அவர் மேற்கொள்ளவுள்ள உத்தியோகபூர்வ சுற்றுப்பயணத்தின் முதல் பயணமாகவே அவர் நேற்று சாலமன் தீவுக்கு சென்றுள்ளார்.

தொடர்ந்து அடுத்த வாரம் பிஜியில் நடைபெற வுள்ள பசுபிக் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்திலும் வாங் யீ பங்கேற்கவுள்ளார். அங்கு அவர் சீனாவின் ஐந்தாண்டு செயல் திட்டத்துக்கான உடன்பாட்டைக் கோருவார்.

சீனாவின் முதல் உயிரியல் பொருளாதார வளர்ச்சிக் கான ஐந்தாண்டு திட்டம் அண்மையில் வெளியிடப் பட்டுள்ளது. மருத்துவம், சுகாதாரம், விவசாயம், வனவியல், ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய துறைகளில் முன்னேறிய உயிரியல் தொழில் நுட்பங்களைச் சேர்ப்பதன் மூலம் உயிரியல் பொருளா தாரத்தின் ஆதாரத் தூண் தொழில்களை விரிவுபடுத்துவதே 2021-2025 ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கமாகும்.





இதனிடையே, இந்த ஒப்பந்தத்துக்கு ஆதரவு கோரி சீன வெளியுறவு அமைச்சர் பசுபிக் நாடுகளுக்கு விஜயம் செய்துள்ள நிலையில் பசுபிக் தீவுகளுக்கு ஆதரவளிப்பதில் அவுஸ்திரேலியா பின்வாங்காமல் முன்னேற வேண்டும் என அந் நாட்டு பிரதமர் அந்தோணி அல்பானீஸ் தெரிவித்துள்ளார்.

கடல்சார் பாதுகாப்பு, கால நிலை மாற்ற ஈடுபாடு, உதவிகளை அதிகரிப்பது மற்றும் பசுபிக் தீவு குடிமக்களை அவுஸ்திரேலியாவுக்கு குடிபெயர அனுமதிப்பது உட்பட தீவு நாடுகளுக்கு ஆதரவளிக்க கூடுதல் நடவடிக்கைகளை தனது புதிய தொழில்கட்சி அரசாங்கம் எடுக்கும் என அல்பானீஸ் கூறினார்.

முன்னைய அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகளின் இருந்து நாங்கள் முன்னேறவேண்டும். பின்வாங்கக் கூடாது என நேற்றைய தினம் ஸ்கை செய்திச் சேவைக்கு அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் பென்னி வோங் பிஜி பிரதமரை சந்திப்பதற்காக நேற்று புறப்பட்டார். (ஐ)

## இராணுவத்தில் இணைவதற்கான வயது வரம்பை நீக்கியது ரஷ்யா!



மொஸ்கோ, மே 27

இராணுவத்தில் இணையும் தொழில்முறை வீரர்களுக்கான வயது வரம்பை ரஷ்யா இரத்து செய்துள்ளது. ரஷ்ய பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இதற்கான சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

இதுவரை ரஷ்ய இராணுவத்தில் இணைவதற்கான உச்ச வயது வரம்பு 40 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில் அது நீக்கப்பட்டுள்ளது. ரஷ்ய இராணுவத்தில் ஆட்சேர்ப்பை அதிகரிப்பதற்கான ஒரு வழியாக இந்த முடிவு பார்க்கப்படுகிறது.

தேவைக்கு ஏற்ற, சிறப்பு தகுதி மற்றும் திறன் உள்ளவர்களை பணியமர்த்துவதை எளிதாக்கும் வகையில் உச்ச வயது எல்லையை நீக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் 18-27 வயதுடைய அனைத்து ஆண்களும் ஒரு வருட கட்டாய இராணுவ சேவையில் ஈடுபட வேண்டும் என்ற நடைமுறை உள்ளது. ஆனால், பலர் பல காரணங்களை சுட்டிக்காட்டி இராணுவ சேவைக்கு செல்ல மறுக்கின்றனர். உரிய காரணங்களை சுட்டிக்காட்டுவோருக்கு கட்டாய இராணுவ சேவையில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

இவ்வாறான நிலையிலேயே இராணுவ சேவையில் குறிப்பாக தொழில்நுட்பம், மருந்துவம் உள்ளிட்ட பிரிவுகளில் அதிகளவானவர்களை உள்ளீர்க்கும் வகையில் இராணுவத்தில் சேருவதற்கான உச்ச வயது வரம்பை ரஷ்யா தளர்த்தியுள்ளது.

பெப்ரவரி 24 அன்று உக்ரைன் மீதான வலிந்த போரை ரஷ்யா தொடங்கியதில் இருந்து இதுவரை 1,351 ரஷ்யப் படையினர் கொல்லப்பட்டனரெனவும், 3,825 பேர் காயமடைந்துள்ளதாகவும் மார்ச் 25 அன்று ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு கூறியது. அதன் பின்னர் தனது இழப்பு விவரங்களை ரஷ்யா அறிவிக்கவில்லை.

இதேவேளை, உக்ரைனில் ரஷ்யா அதிக இழப்புகளை சந்தித்துள்ளதாகவும் மார்ச் மாதத்தில் இருந்து இழப்புக்கள் கடுமையாக உயர்ந்துள்ளதாகவும் உக்ரேனிய மற்றும் மேற்கத்திய உளவுத்துறை அதிகாரிகள் கூறியுள்ளனர். (ஐ)

## ஆப்கானில் உணவு நெருக்கடி; 11 இலட்சம் குழந்தைகள் பாதிப்பு!

நியூயோர்க், மே 27

ஆப்கானிஸ்தானில் 5 வயதுக்கு உட்பட்ட 11 இலட்சம் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் அவதிப்பட வாய்ப்புள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியதிலிருந்து அந்நாட்டில் பொருளாதார, அரசியல் சூழல்கள் மாறியுள்ளன. அங்கு, நிலவிவரும் பொருளாதார மந்தம் மற்றும் அரசியல் சூழல் காரணமாக மக்களுக்கு உணவு கிடைப்பதில் தொடர்ந்து சிக்கல் நீடித்துவருகிறது என்று ஐ. நா. சபை தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் நிலவும் உணவுத் தட்டுப்பாடு காரணமாக 11 இலட்சம் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்படவுள்ளனர் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குழந்தைகளின் எதிர்ப்பு சக்தியை பாதிக்க வாய்ப்புள்ளதை சுட்டிக்காட்டியுள்ள ஐநா இது அவர்களை மருத்துவ சிகிச்சைகளை நோக்கி அழைத்துச் செல்லும் சூழலை உருவாக்கும் எனத் தெரிவித்துள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆயிரம் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்ட நிலையில் 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் அந்த எண்ணிக்கை 18 ஆயிரமாகவும், 2022ஆம் ஆண்டு 28 ஆயிரமாகவும் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டின் இறுதியில் 3 கோடியே 80 இலட்சம் பேர் வறுமைநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உக்ரைன் மீதான படையெடுப்பு மூன்றாம் உலக போருக்கு வழி!

வாஷிங்டன், மே 27

உக்ரைன்மீதான ரஷ்யப் படையெடுப்பு மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுக்கும் என்று அமெரிக்க தொழிலதிபர் ஜோர்ஜ் சொரோஸ் எச்சரித்துள்ளார்.

டாவோஸில் நடைபெற்ற உலக வர்த்தக மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உக்ரைன்மீதான ரஷ்யப் படையெடுப்பு, 3ஆவது உலகப் போரை நோக்கி இட்டுச் செல்லலாம்.

அத்தகைய போர் மனித குலத்தையே முழுமையாக அழித்துவிடும். எனவே, மனித குலம் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால், இந்தப் போர் கூடிய விரைவில் முடிவுக்கு வர வேண்டும் - விளாடிமிர் புடின் தோற்கடிக்கப்பட வேண்டும் - என்றார். எரிவாயு விநியோகத்தை புடின் தற்போது நிறுத்தி வைத்தாலும், சில மாதங்கள் கழித்து அவற்றை அவர் ஐரோப்பி நாடுகளுக்கு விற்பனை செய்தே ஆக வேண்டும் என்றும் கூறினார். (ஐ)

## "எங்கள் நிலத்தை எந்த நிலையிலும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை!"

கீவ், மே 27

எந்த சூழ்நிலையிலும் எங்கள் நிலத்தை விட்டுக் கொடுக்கப் போவதில்லை என உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் 3 மாதங்களை எட்டியுள்ளது. உக்ரைனின் பல நகரங்களில் ரஷ்யாவிடம் வீழ்ந்துள்ளன.

அந்த நாட்டின் கிழக்குப் பிராந்தியமான டான்பாஸ் பகுதியில் ரஷ்ய ராணுவம் தீவிர தாக்குதல் நடத்தியதில் கடுமையான சேதங்களும், பதில் தாக்குதல் நடத்த முடியாத அளவு ஆயுத இருப்பும் இல்லாததால் உக்ரைன் தனது நட்பு நாடுகளிடம் ஆயுதங்கள் வேண்டும் என கோரி வருகிறது.

இதனிடையே, விடாமல் உக்ரைனின் கிழக்குப் பிராந்தியமான டொனட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் பகுதிகளில் ரஷ்யா தீவிர தாக்குதலை மேற்கொண்டு வருகிறது.



மேலும், அந்தப் பகுதிகளில் நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து உக்ரைன் ஜனாதிபதி வொலோதிமீர் ஸெலென்ஸ்கி "ரஷ்யப் படைகள் அனைத்தையும் அழிக்க முயன்று வருகின்றன. தாக்குதல்களால் நிலைமை தொடர்ந்து மோசமடைந்து வருகிறது. போரில் உக்ரைன் தன் நிலத்தை விட்டுக் கொடுக்காது. நாங்கள் எங்கள் நிலத்தில், எங்கள் நாட்டில் போராடுகிறோம்" என்றார். (ஐ)



## கிராண்ட்ஸ்லம் போட்டிகளில் ரபேல் நடால் புதிய மைல்கல்!

பாரிஸ், மே 27

கிராண்ட்ஸ்லம் ரென்னிஸ் போட்டிகளில் 300 வெற்றிகள் என்ற மைல்கல்லை எட்டியுள்ளார் ஸ்பெயின் வீரர் நடால். இந்த வெற்றியுடன், அவர் பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடரின் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

35 வயதான நடால், ரென்னிஸ் விளையாட்டு உலகில் ஆடவர் பிரிவுக்கான தரவரிசையில் ஐந்தாவது இடத்தில் உள்ளார். கடந்த ஜனவரியில் நடைபெற்ற அவுஸ்திரேலிய ஓப்பன் தொடரில் சம்பியன் பட்டம் வென்றிருந்தார்.

இந்நிலையில், கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற பிரெஞ்சு ஓப்பன் தொடரில் தற்போது விளையாடி வருகிறார். இதுவரை அவர் 21 முறை கிராண்ட் ஸ்லம் பட்டத்தை வென்றுள்ளார். அதில் அதிகபட்சமாக பிரெஞ்சு ஓப்பன் தொடர் பட்டத்தை 13 முறை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது சுற்றுப் போட்டியில் பிரான்ஸ் நாட்டு வீரர் கோரன்டின் மவுடெட்டை எதிர்த்து விளையாடினார் நடால். அவரை 6-3, 6-1, 6-4 என்ற செற் கணக்கில் வீழ்த்தி மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார். இதன் மூலமே கிராண்ட்ஸ்லம் போட்டிகளில் 300 வெற்றிகள் என்ற சாதனையை அவர் படைத்தார்.

முன்னதாக ரோஜர் பெடரர் 369 வெற்றிகளையும், ஜோகோவிச் 324 வெற்றிகளையும் கிராண்ட் ஸ்லம் போட்டிகளில் பதிவு செய்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



## செசபிள் மாஸ்ரர்ஸ் சதுரங்கம் இறுதியில் பிரக்ஞானந்தா!

சென்னை, மே 27

செசபிள் மாஸ்ரர்ஸ் சதுரங்க தொடரில் இந்திய கிராண்ட்மாஸ்ரரான பிரக்ஞானந்தா இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இணைய வழியில் நடைபெறும் இத்தொடரின் அரையிறுதியில் பிரக்ஞானந்தா, நெதர்லாந்தின் அனிஷ் கிரியை எதிர்த்து விளையாடினார்.

முதல் சுற்று சமநிலையில் முடிவடைந்தது. அடுத்த சுற்றில் பிரக்ஞானந்தா வெற்றி கண்டார். 3ஆவது சுற்று சமநிலையில் முடிவடைந்தது. பரபரப்பான 4ஆவது சுற்றில் அனிஷ் கிரி வெற்றி பெற்றார். இதனால் ஆட்டம் 2-2 என்றானது.

இதைத் தொடர்ந்து வெற்றியை தீர்மானிக்க சம நிலை தகர்ப்பு முறை பின்பற்றப்பட்டது. இதில் பிரக்ஞானந்தா 1.5-0.5 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இதன் மூலம் இந்தத் தொடரில் இறுதி சுற்றுக்கு முன்னேறிய முதல் இந்திய வீரர் என்ற பெருமையை பெற்றார் பிரக்ஞானந்தா. (ஐ)

### ஐ. பி. எல். வெளியேற்றும் போட்டியில்

# வீழ்ந்தது லக்னோ அணி: முன்னேறியது பெங்களூர்!

கொல்கத்தா, மே 27

லக்னோ அணியை வெற்றி கொண்டு இறுதியாட்டத்துக்கான இரண்டாவது தகுதிச் சுற்றுக்கு முன்னேறியது பெங்களூர் அணி.

வெளியேற்றும் சுற்றுக்கான போட்டியில் கே. எல். ராகுல் சிறப்பாக விளையாடிய போதிலும் கடைசி கட்டத்தில் அவரை வீழ்த்தியதுடன், தொடர்ந்து இரு விக்கெட்களை கைப்பற்றி லக்னோவின் இறுதியாட்ட கனவுக்கு முற்றுப் புள்ளி வைத்திருந்தார் ஹசில்வூட்.

ஐ. பி. எல். இருபது - 20 போட்டி இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இதில், வெளியேற்றும் போட்டி நேற்று முன்தினம் கொல்கத்தாவில் நடந்தது.

இந்தப் போட்டியில் லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் மற்றும் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் மோதின. இதில் 208 ஓட்டங்கள் இலக்குடன் களமிறங்கிய லக்னோ அணி முதல் ஓவரிலேயே முதல் விக்கெட்டை பறிகொடுத்தது.

கடந்த போட்டியில் சதம் அடித்த குயின்ரன் டி கொக் இந்தப் போட்டியில் ஒரு சிக்ஸர் மட்டுமே அடித்து வெளியேறினார். அடுத்து வந்த மனன் வோராவும் நிலைக்க தவறினார். 19 ஓட்டங்களில் அவர் ஆட்டமிழந்தார். எனினும், தலைமைப் பொறுப்பை உணர்ந்து விளையாடினார் கே. எல். ராகுல்.

அவருடன், தீபக் ஹூடாவும் இணைந்து அணியின் ஓட்டத்தை உயர்த்தினார். ஹூடா அதிரடியாக ஆடி, 4 சிக்ஸர்களை விளாசி 26 பந்துகளில் 45 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார் அவர். ஒருபுறம் விக்கெட்கள் வீழ்ந்தாலும், மறுபுறம் தனது அதிரடியை தொடர்ந்தார் கே. எல். ராகுல். இறுதி ஓவர்களை நெருங்கியபோது அணிக்கு தேவையான ஓட்டம் அதிகமானது. ஆனால், அதை இலட்சியம் செய்யாமல் சீரான இடைவெளியில் சிக்ஸர்களை பறக்கவிட்ட ராகுல், அணியை வெற்றியை நோக்கி அழைத்துச் சென்றார்.



கடைசி இரண்டு ஓவர்களில் வெற்றிக்கு 32 ஓட்டங்கள் தேவைப்பட்டபோது சிக்ஸர் அடிக்க முயன்று பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவர் 79 ஓட்டங்களை எடுத்திருந்தார். ராகுலின் ஆட்டமிழப்பைத் மைதானத்தில் நிலவிவந்த நிசப்தம் விலகி ஆர்ப்பரிப்பு நிலவியது. பெங்களூர் வீரர்களிடம் இதே ஆர்ப்பரிப்பு காணப்பட்டது. ஏனென்றால், ராகுல் வெளியேறிய அடுத்த பந்தில் குர்ணல் பாண்ட்யாவும் வந்த வேகத்தில் ஆட்டமிழந்தார்.

6 பந்துகளுக்கு 24 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் களத்தில் இருந்த எவின் லூயிஸ் பக்கம் அனைவரின் கவனமும் திரும்பியது. ஆனால், அவர் பந்தை எதிர்கொள்ளவில்லை. ஆட்டமுனையில் இருந்த துஷ்மந்த சாமீர ஒரு சிக்ஸர் அடித்தாலும், 2 பந்துகளில் 15 ஓட்டங்கள் தேவைப்பட்டதால் அப்போதே பெங்களூரின் வெற்றி உறுதியானது. இதனால் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 193 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து லக்னோ தொடரில் இருந்து வெளியேறியது.

வெற்றிக் கிண்ணத்தை நோக்கிய பயணத்தில் 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மீண்டும் ஒரு வெற்றியை பெற்று பெங்களூர் இறுதியாட்டத்துக்கான தகுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற லக்னோ அணியின் தலைவர் கே. எல். ராகுல் களத்தடுப்பைத் தெரிவு செய்தார். இதனால் பெங்களூர் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அந்த அணிக்காக விராட் கோலி மற்றும் அணித் தலைவர் டு பிளசிஸ் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். டூப்ளசிஸ் ஓட்டம் எதுவும் எடுக்காமல் முதல் ஓவரில் விக்கெட்டை இழந்தார். இவரை அடுத்து வந்த ரஜத் பட்டிதார், கோலியுடன் 66 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டத்தை அமைத்தார். கோலி, 25 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த மக்ஸ்வெல் மற்றும் லோம்ரோர் நிலைக்கவில்லை. இதனால், 115 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்களை இழந்திருந்தது பெங்களூர்.

களத்தில் ஒற்றை ஆளாக போராடிக் கொண்டிருந்த பட்டிதாருடன் இணைந்தார் தினேஷ் கார்த்திக். இருவரும் 92 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டத்தை ஏற்படுத்தினர். பட்டிதார், 54 பந்துகளில் 112 ஓட்டங்களை சேர்த்தார். ஐ. பி. எல். அரங்கில் சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடாத வீரர் பதிவு செய்த சதங்களின் வரிசையில் இது நான்காவது சதமாக அமைந்தது.

பெங்களூர் அணிக்காக இறுதி சுற்றுப் போட்டிகளில் அதிக ஓட்டங்களைப் பதிவு செய்த வீரர், ஐ. பி. எல். வரலாற்றில் இறுதிச் சுற்றில் சதம் பதிவு செய்த ஐந்தாவது வீரர் என்ற சாதனையை இதன் மூலம் அவர் படைத்தார்.

தினேஷ் கார்த்திக், 23 பந்துகளில் 37 ஓட்டங்கள் சேர்த்தார். 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 207 ஓட்டங்களை எடுத்தது பெங்களூர். (ஐ)

# மத்தியூஸ், சந்திமால் எழுச்சி; இலங்கை அணி முன்னிலை!

டாக்கா, மே 27

அனுபவ வீரர்களான அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால் ஆகியோரின் அபார ஆட்டம் கைகொடுக்க வேகமாக 500 ஓட்டங்களை தொட்ட இலங்கை அணி முதல் இனிங்ஸில் 141 ஓட்டங்கள் முன்னிலை வகிக்கிறது.

பங்களாதேஷ் சென்றுள்ள இலங்கை அணி டாக்காவில் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடி வருகின்றது. நேற்றுமுன்தினம் நடந்த மூன்றாம் நாள் ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்ட நிலையில் நான்காம் நாள் ஆட்டம் நேற்று தொடர்ந்தது.

மூன்றாம் நாள் ஆட்ட முடிவின்போது இலங்கை அணி 5 விக்கெட் இழப்புக்கு 282 ஓட்டங்களை எடுத்திருந்தது. அஞ்சலோ மத்தியூஸ் 58 ஓட்டங்களுடனும், தினேஷ் சந்திமால் 10 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று இருவரும் சிறப்பான இணைப்பாட்டத்தை ஏற்படுத்தினர். இருவரும் பங்களாதேஷ் வீரர்களின் பந்துவீச்சை மிகச் சிறப்பாக எதிர்கொண்டனர். இருவரும் சதங்களை கடந்த நிலையில், சந்திமால் ஒரு சிக்ஸர், 11 பௌண்ட்ரிகளுடன் 219 பந்துகளில் 124 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த வீரர்கள் மளமளவென்று விக்கெட்களை இழக்க இலங்கை அணியின் முதல் இனிங்ஸ் 165.1 ஓவர்களில் 506 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் முடிவுக்கு வந்தது.

அஞ்சலோ மத்தியூஸ் 2 சிக்ஸர்கள், 12 பௌண்ட்ரிகளுடன் 145 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பங்களாதேஷின் பந்துவீச்சில் சகீப் அல்ஹசன் 5 விக்கெட்களையும் எபடொற் ஹூஸைன் 4 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து பங்களாதேஷ் அணி தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்துள்ளது. (ஐ)

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
**05 - 12 - 1951**



**மறைவு**
**23 - 05 - 2022**

# திருமதி கோசலாதேவி சொர்ணலிங்கம்

## (கவிதாஞானவாரிதி)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், யாழ். கச்சேரி கிழக்கு ஒழுங்கை, ஜேர்மனி Mülheim ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கோசலாதேவி சொர்ணலிங்கம் அவர்கள் 23.05.2022 திங்கட்கிழமை அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற கந்தையா(சின்னமணி அதிபர்), லட்சுமி தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற சுப்பிரமணி யம், நாகேஸ்வரி(முன்னாள் பிரித்தானியா இராணுவ அதிகாரி, பிரபல வர்த்தகர், மகேஸ்வரி ஸ்டோர்- பெல்மதுளை) தம்பதிகளின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற சொர்ண லிங்கம் (முன்னாள் பிரபல வர்த்தகர், மகேஸ்வரி ஸ்டோர்- பெல்மதுளை, ஜேர்மனி) அவர்களின் ஆருயிர் மனைவியும்,காலஞ்சென்ற தர்மலிங்கம் (அதி பர்), கலாநிதி தர்மரத்தினம் (அவுஸ்திரேலியா), தர்மநாயகம் (ஓய்வுபெற்ற போக்குவரத்து பிரதேச முகாமையாளர்- இலங்கை), தர்மகுலசிங்கம் (O.N.D, லண்டன்),தர்மசூரியர்(சமாதானநீதவான்-இலங்கை),கேதீஸ்வரி,தர்மரட்ணம்(முன்னாள்ஆசிரியை-கனடா),புனிதராணி,அரன்கந்தையா(தொழிலதிபர்- அவுஸ்திரேலியா), காந்திமதி இரத்தினசிங்கம்(முன்னாள் ஆசி ரியை- நோர்வே) ஆகியோரின் பாசமிகு சகோதரியும்,ஜெயறாணி(அவுஸ்திரேலியா), தர்மரட்ணம் (முன்னாள் ஆசிரியர்- கனடா), அரண்கந்தையா(கணக்காளர், தொழிலதிபர், சமதான நீதவான், அவுஸ்திரேலியா), இரத்தின சிங்கம்(பொறியியலாளர்- நோர்வே), சுபலட்சுமி(கனடா), ஜெயறாணி(இலங்கை), பிரியசாந்தா (இலங்கை), ராதா(முன்னாள் ஆசிரியை- லண்டன்), காலஞ் சென்ற முருகானந்தன் மற்றும் சந்திரகலை(கனடா), சிவகலை (கனடா), ஞானகலை(கனடா), ஞானச்சந்திரன்(சந்துரு - சுவிஸ்), உமாச்சந்திரன் (பாபு- கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற கிருஸ்ணபாலன் மற்றும் எதிர்வீரசிங்கம்(கனடா), ஜம்போதரநாதன்(கனடா), கிஸ்னேஸ் வரி (சுவிஸ்), சுபானந்தி (ஆனந்தி- கனடா) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், தர்சினி, எழிலினி, சுதர்சன், சுகன்யா, அனுபன், அகிலன், அஜன், சுரேஸ், ரஜனி, றாஜினி, யாகுலன், யதீஸ், இராகவன், ரேணுஷா ஆகியோரின் அன்பு அத்தையும்,மதனருபன், சஞ்சீவன், புருஷோத், Dr.அர்ச்சனா, Dr.பவித்ரா, செந்தூரன், பிரியான், அர்விந்த், அவினாஸ், அட்சரா(சுவிஸ்), விதுஷன், உஷானி(கனடா) ஆகி யோரின் அன்புப் பெரியம்மாவும்,ஸ்ரீசாதனா, சுகர்ணா, சுமித்திரா, கோபிகிருஸ்ணா, சர்மிகா, கஜன், லாமினா, வேதிகா, ஹனுத்தியா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

பார்வைக்கு
Wednesday, 25 May 2022 3:00 PM - 6:00 PM
Home Feldstraße 127, 45476 Mülheim an der Ruhr, Germany

கிரியை
Friday, 27 May 2022 12:00 PM - 2:00 PM
Hauptfriedhof Mülheim an der Ruhr Zeppelinstraße 132, 45470 Mülheim an der Ruhr, Germany

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**தர்மசூரியர் - சகோதரன்** Mobile : +94770513866
**புனிதராணி - சகோதரி** Mobile : +4915775930819
**செல்வநாயகம் - சகோதரன்** Mobile : +33612715314
**சந்துரு - மைத்துனர்** Mobile : +41791363725
**பாபு - மைத்துனர்** Mobile : +14379905926

தகவல்:
**குடும்பத்தினர்.**

ஈழநாடு



## பொருளாதார...

பொருளாதாரத்தை வழி நடத்திய ஒரு சிலரின் தீர்மானங்களினால் இன்று முழு நாடும் பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாகவும் இதனை குற்றமாகக் கருதி உடனடியாக விசாரணை நடத்த வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மற்றும் வங்கியின் தற்போதைய செயற்பாடுகளை ஆராய்வதற்காக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் மூத்த அதிகாரிகள் இரண்டாவது நாளாக நேற்று கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டனர்.

பொருளாதார நெருக்கடிக்கான அடிப்படைக் காரணங்கள் குறித்து கோப் குழு மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவிடம் கேட்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டு மார்ச்-ஏப்ரல் மாதங்களில் சர்வதேச நாணய நிதியத்துக்கு கடன் வசதிகளைப் பெறச் சென்றபோது, இலங்கை கடன் நிலைத்தன்மையற்ற நாடு என்று கூறப்பட்டதாக வீரசிங்க தெரிவித்தார்.

எனவே, கடன் வசதிகளை பெற்றுக் கொள்வதற்காக தற்போதுள்ள கடன்களை மறுசீரமைக்கவேண்டும் என்று அப்போதைய நிதியமைச்சின் செயலாளர் மற்றும் மத்திய வங்கி ஆளுநருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்படி, தொழில்நுட்ப கலந்துரையாடல்களின் பின்னர், மத்திய வங்கியின் நாணயச் சபை, இது தொடர்பான தொழில்நுட்ப விடயங்களை நிதியமைச்சர் மற்றும் ஏனைய மூத்த அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்ததுடன், நிதி அமைச்சர் உள்ளிட்ட அமைச்சரவையினால் தீர்மானங்கள் எடுக்கப்படும் என மத்திய வங்கியின் ஆளுநர் கூறினார்.

அப்போதைய நிதியமைச்சர் ஒருபோதும் பாராளுமன்றத்தில் உரையாற்றியதில்லை எனவும் அவர் சார்பாக பாராளுமன்றத்தில் உரையாற்றிய அஜித் நிவாட் கப்ரால், இந்த உண்மையை பாராளுமன்றத்துக்கு தெரிவிக்கவில்லை என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நவம்பர் 2019 அனைத்துலக நாணய நிதியத்தின் அறிக்கையின்படி, அந்த நேரத்தில் இலங்கை கடன் மட்டத்தில் இருந்ததாகவும், பின்னர், ஜனாதிபதித் தேர்தலுக்கு சில மாதங்களுக்குப் பிறகு வெளியிடப்பட்ட சர்வதேச நாணய நிதிய அறிக்கையின்படி, இலங்கை நீடிக்க முடியாது என்று அறிவிக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அன்றைய ஜனாதிபதியின் செயலாளரின் தலையீட்டினால் 60,000 மில்லியன் ரூபா வரிச்சலுகை மேற்கொள்ளப்பட்டதாகவும், வரி வருமானத்தை குறைக்க வேண்டாம் என்று சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை முன்னர் தெரிவித்திருந்தபோதிலும் அவ்வாறான தீர்மானத்தை எடுத்தது யார் என்பது கேள்விக்குறியாக உள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கூறினார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய சரத் வீரசேகர, புதிய தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

அண்மைக் காலத்தில் மாற்று விகிதத்தை சிரமமின்றி தக்க வைத்ததால் பெரும் தொகை இழப்பு ஏற்பட்டமை தொடர்பாக சமூகத்தின் நிலவும் கருத்து குறித்து பாராளுமன்ற தெரிவுக் குழு (கோப்) கேட்டறிந்தது.

இது தொடர்பில் நாணயச் சபைக்கே அதிகாரம் உள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்தார்.

இந்த நாணயச் சபையின் அங்கத்தவர் கலாநிதி ராணி ஜயமஹா, இந்த மாற்று விகிதத்தை பேணுவதற்கு மத்திய வங்கியின் கையிருப்பை பயன்படுத்துவதற்கு தாம் கடும் எதிர்ப்பு தெரிவிப்பதாக அவரும் முன்னாள் நாணய சபை உறுப்பினர் சஞ்சீவ ஜயவர்தனவும் எழுத்து மூலம் அறிவித்ததாக தெரிவித்தார்.

எவ்வாறாயினும், நாணயச் சபையின் மூன்று உறுப்பினர்களின் கருத்தின்படி மாற்று வீதத்தை ஒரே மட்டத்தில் வைத்திருக்கவேண்டியிருந்தது என்றும், இது அப்போதைய மத்திய வங்கியின் ஆளுநராக இருந்த பேராசிரியர் டபிள்யூ. டி.லக்ஸ்மனின் உத்தரவின் பேரில் பின்னர் திறைசேரியின் செயலாளரும் உறுப்பினருமான சமந்த குமாரசிங்கவினால் மேற்கொள்ளப்பட்டது என்றும் தெரிய வந்துள்ளது.

வெளித்தரப்பினரின் செல்வாக்கு இன்றி துல்லியமான தொழில்நுட்பத்தின் அடிப்படையில் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரத்தை மத்திய வங்கிக்கு வழங்க வேண்டியதன் அவசியத்தை கோப் குழு வலியுறுத்தியுள்ளது.

தற்போதைய நெருக்கடிக்கான தீர்வுகள் குறித்தும் நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

அனைத்துலக நாணய நிதியத்துடன் உடன்படிக்கைக்கு வரும் வழியில் எதிர்வரும் 3-4 மாதங்களுக்கு தேவையான அந்நியச் செலாவணியை பெற்றுக்கொள்வது கடினமாக இருந்தாலும், அந்த சவாலை எப்படியாவது வெற்றிகொள்ள முயற்சிப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் மேலும் குறிப்பிட்டார்.

தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட பிரச்னைகளுக்கு முகம் கொடுக்கும் வகையில் குறைந்தபட்ச அரச பணியாளர்களை பேணவேண்டியதன் அவசியத்தை அரச நிர்வாக அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடுமாறு பாராளுமன்ற தெரிவுக் குழு தலைவர் நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவுக்கு பரிந்துரைத்துள்ளார்.

பொருளாதார நெருக்கடி மற்றும் அடுத்த மூன்று வாரங்களுக்குள் அதை செயல்படுத்துவதற்கான திட்டத்தை உடனடியாக உருவாக்கவேண்டும். தற்போதைய நெருக்கடியை தீர்ப்பதற்கு எடுத்த முயற்சிகளுக்காக நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் ஆகியோரை பாராளுமன்ற தெரிவுக் குழு தலைவர் பாராட்டினார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான பாட்டலி சம்பிக்க ரணவக்க, ரவூப் ஹக்கீம், ஜகத் புஷ்ப குமார, மதுர விதானகே மற்றும் கணக்காய்வாளர் நாயகம் பிரேம்நாத் சி டொலவத்த, நிதியமைச்சு மற்றும் மத்திய வங்கியின் அதிகாரிகளும் பங்கேற்றனர் என்று கொழும்பு செய்திகள் மேலும் தெரிவித்தன. (அ)

## பதவி...

எனினும், அவர் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பாதுகாப்பு படைகளின் பிரதானியாக அவர் பொறுப்பிலிருப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சவேந்திர சில்வா 2019 ஒகஸ்ட் 18ஆம் திகதி இராணுவத்தின் 23ஆவது தளபதியாக அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியிமிக்கப்பட்டார். 2020 டிசெம்பர் 28ஆம் திகதி அவருக்கு நான்கு நட்சத்திர அந்தஸ்துள்ள பதவி உயர்வை அவர் வழங்கினார். தளபதியாக நியமிக்கப்பட்ட கஜபா படைப்பிரிவின் தளபதியாக செயல்பட்டிருந்தார்.

இதேசமயம், மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே எதிர்வரும் முதலாம் திகதி, புதிய இராணுவத் தளபதியாக பதவியேற்பார் என இராணுவம் தெரிவித்துள்ளது.

## அரச...

மேலும் பட்ஜெட் உரையின்போது தனியார் துறை ஊழியர்களுக்கும் சம்பள உயர்வுக்கான கோரிக்கையை பிரதமர் விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, சம்பள உயர்வுக்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு பட்ஜெட் தயாரிக்கும் அதிகாரிகளுக்குப் பிரதமர் அறிவுறுத்தியுள்ளார்.

மைத்திரி - ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசில் - 2015ஆம் ஆண்டில் அரச ஊழியர்களின் சம்பளம் 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கையில்...

நேற்று தமிழகம் சென்ற இந்தியப் பிரதமர் அங்கு பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை தொடக்கி வைத்தார். இதன்போது உரையாற்றிய அவர்,

இலங்கைக்கு இந்தியா அனைத்து உதவிகளையும் வழங்கி வருகிறது. இலங்கை கடினமான காலங்களை கடந்து வருகிறது. நெருங்கிய நண்பன், அயல் நாடு என்ற வகையில் இந்தியா நிதியுதவியையும் எரிபொருள், உணவு, மருந்துகள், பிற அத்தியாவசிய பொருட்களையும் வழங்கி ஆதரவளிக்கிறது.

இந்தியாவின் பல அமைப்புகள், தனிநபர்களும் இலங்கைக்கு உதவிகளை அனுப்பியுள்ளனர். இலங்கைக்கு பொருளாதார ஆதரவை வழங்க சர்வதேச அரங்கிலும் இந்தியா வலுவான ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இந்தியா தொடர்ந்தும் இலங்கை மக்களுடன் நின்று ஜனநாயக நிலைத்தன்மை, பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிக்கும் என்று கூறினார். (ஐ)

## நட்பு நாடுகளின்...

அதற்கு ஆதரவளிக்கும் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

ஜப்பானின் ரோக்கியோவில் நேற்று காணொளி அழைப்பின் ஊடாக நடைபெற்ற ஆசியாவின் எதிர்காலம் தொடர்பான 27ஆவது சர்வதேச மாநாட்டில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

குறித்த மாநாட்டில் மேலும் உரையாற்றிய அவர், பல அரசியல் கட்சிகளின் பிரதிநிதித்துவத்துடன் புதிய பிரதமரையும் அமைச்சரவையையும் நியமித்துள்ளோம். மேலும் தேசிய ஒருமித்த கருத்தை உருவாக்குவது தொடர்பாக பாராளுமன்றத்தில் தொடர்ந்து விவாதங்களை நடத்தி வருகிறோம்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் கொரோனா தொற்று காரணமாக சுற்றுலாத்துறையின் மெய்நிகர் மூடல் மற்றும் வெளிநாட்டு ஊழியர்களின் உள்நாட்டில் பணம் செலுத்துவதில் கூர்மையான சரிவு மற்றும் பிற நிகழ்வுகள் காரணமாக அதிகரித்த பணவீக்கம் மற்றும் கடுமையான நிதி நெருக்கடியை ஏற்படுத்தியது.

சர்வதேச நாணய நிதியத்துடனான பொருத்தமான வேலைத்திட்டத்துக்கு அமைவாக எமது கடனாளிகளுடன் கலந்தாலோசித்து வெளிநாட்டு அரசாங்கக் கடனை மறுசீரமைக்கும் நோக்கத்துடன் இலங்கை ஏப்ரல் மாதம் “கடன் ஒருங்கிணைப்பு” ஒன்றை அறிவித்தது.

எவ்வாறாயினும், அத்தியாவசிய மருந்துகள், உணவு மற்றும் எரிபொருளை இறக்குமதி செய்வது போன்ற நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்துவதற்கு நட்பு நாடுகளின் ஆதரவு இலங்கைக்கு அவசரமாகத் தேவை

ஜப்பான் இலங்கையின் முக்கிய அபிவிருத்தி பங்காளிகளில் ஒன்றாக உள்ளதுடன், ஜப்பானிடம் இருந்து நிதியை இணைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் விரைவில் முடிவடையும் என்று நம்புகிறோம்.

இந்த கடினமான நேரத்தில் நமது நாட்டுக்கு ஆதரவையும் ஒற்றுமையையும் வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு ஏனைய நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன்.

உலகம் எதிர்காலத்தில் எதிர்கொள்ளும் இன்னும் பரவலான பிரச்னை உணவுப் பாதுகாப்பைப் பற்றியது. எதிர்வரும் மாதங்களில் ஏற்படக்கூடிய உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் உணவுப் பொருட்களின் விலைகளில் கூர்மையான அதிகரிப்பு என்பன பல நாடுகளுக்கு கணிசமான அழுத்தத்தை ஏற்படுத்தும்.

எனவே இந்த முக்கியமான பிரச்னையில் நாம் கவனம் செலுத்துவதும் முன்னுரிமை கொடுப்பதும் அவசியம்.

இந்தப் பிரச்னையை நாம் வெற்றிகொள்வதை உறுதிப்படுத்துவதற்கு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பது அவசியமாகும்-என்றார். (அ)

## ஆழ்கடல் மீன்பிடியிலிருந்து ஒதுங்க மீனவர்கள் முடிவு!

கொழும்பு, மே 27

எமது தொழிலை முன்னெடுத்துச் செல்வதற்கான எரிபொருள் நிவாரணத்தை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால், மீன்பிடி நடவடிக்கை களிலிருந்து ஒதுங்கிக் கொள்ளவதாக அகில இலங்கை பலநாள் மீன்பிடிப் படகு உரிமை யாளர்கள் சங்கத்தினர் தீர்மானித்துள்ளனர்.

## சிறுநீரக,...

நோயாளிகளின் இரத்த சிவப்பு அணுக்களை அதிகரிக்கப் பயன்படுத்தப்படும் மருந்துகளின் கையிருப்பு குறைந்து வருகிறது. சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட நபர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்குத் தேவையான மருந்துகளும் தீர்ந்துவிட்டன. இந்த மருந்துகள் இல்லாமல் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மூலம் எதிர்பார்க்கப்படும் முடிவுகளை உறுதி செய்ய முடியாது.

புற்று நோயாளிகள் வாய்வழி சிகிச்சையைப் பெறுகிறார்கள். மற்றவர்கள் இந்த சிகிச்சைகள் கடுமையான அட்டவணையில் தொடர வேண்டும். எவ்வாறாயினும் அத்தியாவசிய மருந்துகள் தட்டுப்பாடு காரணமாக சிகிச்சையை ஆரம்பித்த நோயாளர்கள் மிகவும் அவல நிலையை எதிர்நோக்கியுள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இருதய நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப்படும் பல மருந்துகளின் இருப்புக்கள் மற்றும் நீரிழிவு நோயாளிகளுக்குத் தேவையான கரையக் கூடிய இன்சுலின் இருப்புக்கள் தற்போது தீர்ந்து வருகின்றன.

அரசாங்க மருந்தாளர் சங்கம், ஜனாதிபதி, முன்னாள் பிரதமர், முன்னாள் நிதியமைச்சர், சுகாதார அமைச்சு உள்ளிட்ட அதிகாரிகளுக்கு முன்னரே அறிவித்திருந்தும் இவ்வாறானதொரு நிலை ஏற்படும் என தெரிவித்திருந்தும் அதிகாரிகள் கவனம் செலுத்தத் தவறிவிட்டனர்.

துரித நடவடிக்கை எடுக்கத் தவறியதன் விளைவாக நோயாளிகள் கடுமையான சுமைகளை எதிர்கொள்கின்றனர். இதேவேளை, நாட்டின் மருத்துவமனை அமைப்பு செயல்பட முடியாமல் முழு சுகாதாரத் துறையின் வீழ்ச்சிக்கும் வழி வகுத்துள்ளதாக என்றும் திலகரத்ன கூறினார். (ஐ)

## கச்சதீவை...

நேற்று தமிழ்நாடு வந்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஸ்டாலின் பிரதமர் மோடியிடம் பல கோரிக்கைகளை முன்வைத்து உரையாற்றினார். இதில், “தமிழ்நாட்டின் கடலோர மீனவ மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வகையில் கச்சதீவை மீட்டு அவர்களின் உரிமையை நிலைநாட்ட இது தகுந்த தருணம் என்பதை நினைவுபடுத்தக் கடமைப் பட்டுள்ளேன் - என்றும் கூறினார். (ஐ)

## பெற்றோல்...

எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு வரும் நுகர்வோரின் வாகன இலக்க விவரத்தை உள்ளிட்டதும், அந்த வாகனம் ஒரேநாளில் வேறு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து எரிபொருளை நிரப்பியதா என்பது குறித்த தகவல்களை அளிக்கும் என்றும் கூறினார். (ஐ)

## படை...

யாக நியமிக்கப்பட்டமையை தொடர்ந்தே விகும் லியனகே இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் விகும் லியனகேயும் கஜபா படைப் பிரிவை சேர்ந்தவராவார். கடந்த ஆண்டு தலைமை அதிகாரியாக நியமிக்கப்படுவதற்கு முன்னர் இலங்கை இராணுவத்தின் தொண்டர் படையின் கட்டளை தளபதியாக இவர் பணியாற்றியிருந்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# நிறைவேற்று அதிகாரத்தை குறைக்க கோட்டாபய ராஜபக்ஷ தயாரில்லை!

## அரசியலமைப்புச் சட்ட நிபுணர்கள் கருத்து

கொழும்பு, மே 27

**21ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு அமைய நிறைவேற்று அதிகாரங்களை குறைக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தயாரில்லை என்பது தெரியவந்துள்ளதாக அரசியலமைப்புச் சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

புதிய அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் அமைச்சுக்களை கையகப்படுத்துதல் மற்றும் அமைச்சுக்களை மற்றவர்களுக்கு பகிர்வது தொடர்பில் ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரங்கள் அப்படியே இருப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் ஜனாதிபதி தன்னிச்சையாக அமைச்சுக்களை கையகப்படுத்தும் அதிகாரம் நீக்கப்பட்டிருந்தது.

அத்துடன் ஜனாதிபதி அமைச்சுப் பதவிகளை வகிப்பது வரையறுக்கப்பட்டிருந்தது.

19ஆவது அரசியலமைப்புச் சட்டத்துக்கு அமைய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு பின்னர் பதவிக்கு வரும் ஜனாதிபதிக்கு அமைச்சுப் பதவிகளை வகிக்க முடியாது என கூறப்பட்டிருந்தது.

மேலும் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு அமைய அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிவில் உறுப்பினர்கள் அடங்கலாக 10 பேரை கொண்டிருக்கவேண்டும்.

20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்துக்கு அமைய அரசியலமைப்பு பேரவைக்கு வழங்கப்பட்டிருந்த பெயரளவிலான அதிகாரம் அப்படியே 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தாலும் ஜனாதிபதியின் அதிகாரங்களை தன்னிச்சையாக பயன்படுத்தமுடியும் எனவும் அரசியலமைப்புச் சட்ட நிபுணர்கள் கூறியுள்ளனர்.

மேலும் 19ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைய உருவாக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் 20ஆவது திருத்தச் சட்டத்தில் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன.

21 ஆவது திருத்தச் சட்டத்திலும் சுயாதீன ஆணைக்குழுக்கள் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் வகையிலேயே ஷரத்துக்கள் இருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், மே 13

உலகெங்கும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமான வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இறை ஆசி வேண்டி பிரார்த்தனை நடைபெறுகிறது.

இந்தப் பிரார்த்தனை வரிசையில் நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் சுழிபுரம் வீரபத்திரர் உடன்உறை பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சி.திருஞானசம்பந்தக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையில் நேரடியாக ஒலிபரப்பாகும். (ஐ)

# மிரிஹானை சம்பவம் ஆராய்வதற்கு புதிய குழு

கொழும்பு, மே 27

மார்ச் 31ஆம் திகதி இடம் பெற்ற மிரிஹானை சம்பவம் மற்றும் மே 9ஆம் திகதி நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற சம்பவத்தின்போது முப்படையினரின் கவனவீனம் ஏதும் இடம்பெற்றதா என ஆராய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் கடற்படை தள பதி அட்மிரல் ஒப் த பீல்ட் வசந்த கரன்னாகொட, முன்னாள் விமான படை தளபதி மார்ஷல் ஒப் த எயார் போர்ஸ் ரொஷான் குணதிலக மற்றும் ஜெனரல் தயா ரத்நாயக்க உள்ளிடோர் இந்த குழுவில் இடம்பெற்றுள்ளனர். (ஐ)



# பிரதமர் வீட்டின் முன் நடந்த போராட்டத்தால் பதற்றம்!

கொழும்பு, மே 27

நீதிமன்ற தடையை மீறி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வீடு மற்றும் அலுவலகப் பகுதியில் நேற்று போராட்டம் இடம்பெற்றது. இந்தப் போராட்டத்தை பொலிஸ், விசேட அதிரடிப் படை தடுத்து நிறுத்தியமையால் அந்தப் பகுதியில் பதற்றம் அதிகரித்தது.

அலரி மாளிகைக்கு அண்மையா “நோ டீல் கம“ போராட்ட கிராமத்திலிருந்து பிளவர் வீதியை நோக்கி போராட்டக்காரர்கள் பேரணியாக சென்றனர். அவர்களை பொலிஸார் தடுத்த நிலையில் வீதியை மறித்து போராட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால், பூங்கா வீதியை அண்மித்துள்ள பல வீதிகளில் வாகன நெரிசல் ஏற்பட்டதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வீடு அமைந்துள்ள கறுவாத்தோட்டம் 5 ஆம் ஒழுங்கை, மற்றும் அந்தப் பகுதியில் உள்ள வீதிகள் மற்றும் பாடசாலைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்படும் போராட்டங்களை தடுக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (ஐ)

# ஜனாதிபதி, அரசாங்கம் உடன் விலக வேண்டும்!

## எதிர்க்கட்சி வலியுறுத்து



கொழும்பு, மே 27

ஜனாதிபதியும் அரசாங்கமும் உடனடியாக இராஜி நாமா செய்ய வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ் மன் கிரியெல்ல இதனை தெரிவித்துள்ளார்.

அத்துடன், தற்போதைய சூழ்நிலையில் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கும் இலங்கை மீது நம்பிக்கை இல்லை என்று கூறிய அவர், சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்கத்தின் தேவை தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# மத்திய வங்கி ஆளுநராக மீண்டும் அமரமாட்டேன்!

## இந்திரஜித் குமாரசுவாமி விளக்கம்

கொழும்பு, மே 27

மத்திய வங்கியின் ஆளுநராக மீண்டும் பதவியேற்கும் எண்ணம் தனக்கு இல்லை என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிடம் அவர் இதனை கூறியுள்ளார்.

மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க இந்த இக்கட்டான நேரத்தில் மத்திய வங்கியின் ஆளுநராக முக்கியப் பங்காற்றி வருவதாக கலாநிதி குமாரசுவாமி தெரிவித்தார்.

நிதி அமைச்சராக ரணில் விக்ரமசிங்க பதவியேற்றுள்ள நிலையில் மத்திய வங்கி ஆளுநரில் மாற்றம் ஏற்படலாம் என தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இதன்படி, தற்போதைய மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்கவுக்கு பதிலாக இந்திரஜித் குமாரசுவாமி நியமிக்கப்படுவார் எனவும் அந்த செய்தியில் கூறப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் குறித்த ஊடகம் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமியிடம் கேள்வியெழுப்பியிருந்தது. இதற்கு பதிலளித்து பேசிய அவர், மத்திய வங்கியின் ஆளுநராக மீண்டும் பதவியேற்கும் எண்ணம் தனக்கு இல்லையென குறிப்பிட்டார். (அ)

# முல்லைத்தீவில் நேற்று கடற்றொழிலாளர் பேரணி!



முல்லைத்தீவு, மே 27

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் எரிபொருளை பெற்றுத்தரகோரி கவனவீர்ப்பு போராட்டத்தை நேற்று முன்னெடுத்தனர்.

மண்ணெண்ணைய் இல்லாததால் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் கடற்றொழில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மண்ணெண்ணெயை பெற்றுத்தரகோரி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு சுனாமி நினைவாலயத்தில் இருந்து ஆரம்பமான ஆர்ப்பாட்ட பேரணி முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அலுவலகம் ஊடாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தை சென்றடைந்தது. இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் ஆர்ப்பாட்டகாரர்களை உள்ளே அழைத்து கடற்றொழிலாளர்களின் மனுவை பெற்றுக் கொண்

# அனைத்து வர்த்தகங்களும் வீழ்ச்சியடையும் அபாயம்!

## ஐக்கிய வர்த்தக மன்றம் எச்சரிக்கை

கொழும்பு, மே 27

அடுத்த மாதம் அனைத்து வர்த்தகங்களும் வீழ்ச்சியடையும் அபாயத்தில் இருப்பதாக இலங்கை ஐக்கிய வர்த்தக மன்றம் அறிவித்துள்ளது.

சங்கத்தின் தலைவர் டானியா அபயசுந்தர இதனை தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாள் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர்-

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து இனி தொழிலை நடத்த முடியாது. இதுவரை காலமும் சேமிப்பில் எங்கள் தொழில்களை நடத்தி வந்தோம்.

எனினும், தற்போது அதனை தொடர்வது மிகவும் கடினமாக உள்ளது.

அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு பணம் அச்சடிக்கப்படுகிறது. எனினும், தனியார் துறை ஊழியர்களுக்கு என்ன நடக்கும்?

அரசு ஊழியர்களுக்கு பணம் அச்சடித்து ஊதியம் வழங்கினால், எங்களுக்கும் பணம் அச்சிட அச்சகம் வழங்கவேண்டும்-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
7.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை



1.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-தங்கமகன்,வானம் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10




**இரவு**
7.00 மணி : ரசிகன் எனகின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -பொருளாதாரம்



10.00 மணி : நேருக்கு நேர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**ஓம் ரிவி**

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகக்கோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு